**தலைப்பு 117 – நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று , 2019 திசெம்பர் 31 அம்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய நிதிச் செயலாற்றல் கூற்று 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 ஜுன்30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒகஸ்ட் 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய பொது கணக்குகள் சுற்றறிக்கை இல.271/2019 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஒருங்கினைந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

--------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றேவிட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச்செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில், முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) நெடுஞ்சாலைகள் பிரிவுடன் தொடர்புபட்டு முன்னய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக செய்யப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிக் கூற்றுக்களின் சுற்று நிருப ஏற்பாடுகளுடன் இணக்கமின்மை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவுடன் தொடர்புபட்டு திறைசேரி புத்தகங்களிலுள்ளமொத்தமாக ரூபா 123,418,859 கட்டண வருமானம் 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் வேறாக காட்டப்பட்டிருக்கவில்லை. | மொத்த வருமானம் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். | அளவீடுகளை உங்கள் அறிவுறுத்தல்களின் பிரகாரம்எதிர்காலநிதிசெயலாற்றல்கூற்றில் சரியான மூலத்தின் கீழ் அதனை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) அமைச்சின் விரிவான ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின்படி பெறப்பட்ட முற்பணம் ரூபா 67,600,247,550 தொகையாக இருந்த போதிலும் நிதி செயலாற்றல் கூற்றில் இது ரூபா 67,887,468,424 எனக் காட்டப்பட்டிருந்தது. | பெறப்பட்ட திறைசேரி முற்பண பெறுமதி சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். | ஏனைய திணைக்களங்கள் சார்பாக பெறப்பட்ட வருமானம் அவைகளை திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட முற்பணமாக கருதி நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமல்லா பெறுவனவுகளின் கீழான திறைசேரி முற்பணங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| (இ) திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் வைப்புப் பெறுவனவுகள் ரூபா | மாதாந்த கணக்குகள் சராம்சத்தின் ஊடாக திறைசேரி புத்தகங்களுடன் | நெடுஞ்சாலைபிரிவின்தலைப்பு இல.117இன் கீழான வைப்புப் பெறுவனவுகள் மற்றும் உயர்கல்வி பிரிவின் தலைப்பு இல. 166 இன் |

| | | |
|---|---|---|
| 1,373,147,081 தொகையாக காணப்பட்ட போதிலும், இது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 1,351,879,462 என காட்டப்பட்டிருந்தது. | இணக்கம் செய்ய தேவையான திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும். | கீழான வைப்பு பெறுவனவுகள் என்பன ரூபா 1,373,147,081 தொகையினுல் உள்ளடக்கப்பட்டு கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிட்ட படி வைப்பு பெறுவனவுகளாக காட்டப்பட்டுள்ளது. நிதிசெயலாற்றல் கூற்றில் இம் மொத்த பெறுமதி தவறான உள்ளடக்கம் என்பதால் தலைப்பு இல 117 இன் கீழான ரூபா 1,351,879,462 இன் வைப்பு பெறுவனவுகள் மாத்திரம் நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. |
| (ஈ) திறைசேரி பத்தகங்களின் பிரகாரம் முற்பணபெறுவனவுகள் பெறுமதி ரூபா 42,287,268 ஆக இருந்த போதிலும்இ இது நிதி செயவாற்றல் கூற்றில் ரூபா 13,220,824 என காட்டப்பட்டிருந்தது. அதனடிப்படையில், முற்பணபெறுவனவுகள் நிதிசெயலாற்றல் கூற்றில் ரூபா 29,066,444 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | மொத்த முற்பண பெறுவனவுகளும் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். | கணக்காய்வினால் குறிப்பிடப்பட்ட படி அடுத்த வருடத்தில் மொத்த பெறுவனவுகளையும் முற்பண ‘‘பீ‘‘ கணக்கின் பெறுவனவுகளாக நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை பணிவுடன் அறியத்தருகின்றேன் |
| (உ) ஏதாவது பெறுவனவு நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் காட்டப்படாதிருப்பினும், மொத்தமாக ரூபா 163,802,015 ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் சார்பாக அமைச்சினால் பெறப்பட்டிருந்தது. இதில் மொத்தமாக ரூபா 12,616,139 வருமானத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இல பொது கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம்இ மொத்தமாக ரூபா 151,185,876 நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏளைய பெறுவனவுகளாக காட்டப்பட்டிராததுடன் மொத்தமாக ரூபா 12,616,139 வருமானத்திலிருந்து மீள செலுத்தப்பட்டதாக காட்டப்பட்டது வடிவமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை | ஏனைய பெறுவனவுகள் சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் வேறாக காட்டப்படல் வேண்டும். | ரூபா 151,185,876 பெறுமதி பின்வருமாறு உருவாக்கப்பட்டிருந்தது<br>ஏனைய வருமான பெறுவனவுகள் ரூபா 163,802,015<br>(-) மீளசெலுத்தப்பட்ட வருமானம் ரூபா 12,616,139<br>தேறிய வருமான பெறுவனவுகள் ரூபா 151,185,876<br><br>ரூபா 163,802,015 ஏனைய வருமான பெறுவனவுகள் செயலாற்றல் கூற்றில் திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட முற்பணமாக காட்டப்பட்ட ரூபா 67,887,468,424 எனும் பெறுமதியினுள் உள்ளடக்கப்பட்டிருந்ததனால், கணக்காய்வினால் விபரிக்கப்பட்ட மொத்தமாக ரூபா 151,185,876 நிதி செயலாற்றல் கூற்றில் உண்மையாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் அறியத்தறுகின்றேன். |

ல.

| | | |
|---|---|---|
| (ஊ) திறைசேரி புத்தகங்களின் பிரகாரம், வைப்பு கொடுப்பனவுகள் ரூபா 1,617,026,030 என காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 1,661,942,323 என காட்டப்பட்டிருந்தது. | மாதாந்த கணக்குகள் சாராம்சத்தினூடாக திறைசேரி புத்தகங்களுடன் இணக்கஞ் செய்யவும் மிகுதியை ஆண்டு முடிவில் திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நெடுஞ்சாலை பிரிவின் தலைப்பு இல.117 இன் கீழான வைப்புப் கொடுப்னவுகள் மற்றும் உயர்கல்வி பிரிவின் தலைப்பு இல. 166 இன் கீழான வைப்பு கொடுப்னவுகள் என்பன ரூபா 1,617,026,030 தொகையினுல் உள்ளடக்கப்பட்டு கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிட்ட படி வைப்பு பெறுவனவுகளாக காட்டப்பட்டுள்ளது. நிதிசெயலாற்றல் கூற்றில் இம் மொத்த பெறுமதி தவறான உள்ளடக்கம் என்பதால் தலைப்பு இல 117 இன் கீழான ரூபா 1,661,942,323 இன் வைப்பு கொடுப்னவுகள் மாத்திரம் நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. |
| (எ) திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் வைப்புப் கொடுப்னவுகள் ரூபா 39,228,348 தொகையாக காணப்பட்ட போதிலும், இது நிதிசெயலாற்றல் கூற்றில் ரூபா 23,674,180 என காட்டப்பட்டிருந்தது. | அனைத்து முற்பண கொடுப்பனவுகளும் வேறுவேறாக கணக்கிடப்படல் வேண்டும். | கணக்குகளில் உண்மையாக விபரிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் விரிவான ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின்படி பெறப்பட்ட முற்பணம் ரூபா 67,600,247,550 தொகையாக இருந்தபோதிலும்காசுப்பாய்ச்சல்கூற்றில் இது ரூபா 67,887,468,424 எனக் காட்டப்பட்டிருந்தது. | பெறப்பட்ட முற்பணம் சுற்றறிக்கைகளின் பிரகாரம் முறையாக குறிப்பிடப்படல் வேண்டும். | ரூபா 287,365,856 தொகையான ஏனைய வருமான ரசீதுகள் திரைசேரியிடமிருந்து பெறப்பட்ட ஒரு முற்பணமாக காட்டப்பட்டு 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க பொது கணக்குகள் சுற்றறிக்கையின் 7(ii) இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒரு பெறப்பட்ட முற்பணமாக காட்டப்பட்ட ரூபா 67,887,468,424 பெறுமதியினுல் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) அமைச்சின் விரிவான ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின்படி ஏனைய செலவு தலைப்புகளிற்காக ஏற்பட்ட செலவுகள் | ஏனைய செலவு தலைப்புகளிற்காக ஏற்பட்ட செலவினங்கள் | எதிர்காலத்தில் அனைத்து முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை |

| | | |
|---|---|---|
| ரூபா 29,418,965 தொகையாக இருந்த போதிலும் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 28,781,939 எனக்காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வேறுவேறாக குறிப்பிடப்படல் வேண்டும். | நிதிசெயலாற்றல் கூற்றில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவு தொடர்பாக வசூலிக்கப்பட்டிருந்த ரூபா 123,418,859 தொகையான கட்டணங்கள் வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறப்பட்ட கட்டணங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | கட்டண வருமானம் சுற்றறிக்கைகளின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறாகக்காட்டப்படல் வேண்டும். | பெறப்பட்ட கட்டணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவுடன் தொடர்பாக பெறப்பட்ட கட்டணங்கள் ரூபா 123,418,859 தொகையாக இருந்த போதிலும் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறப்பட்ட முற்பணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 67,887,468,424 எனும் தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்தது என்பதை பணிவுடன் அறியத்தருகின்றோம். |
| (ஈ) அமைச்சின் விபரமான ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ஒரு வருமானமல்லா பெறுவனவுகளாக பெறப்பட்ட மொத்தமாக ரூபா 151,185,875 காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வருமானமல்லா பெறுவனவுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல்கூற்றில் வேறுவேறாக காட்டப்படல் வேண்டும். | வருமானமல்லா பெறுவனவுகளாக பெறப்பட்ட மொத்தமாக ரூபா 151,185,875 காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறப்பட்ட முற்பணங்களின் கீழாக காட்டப்பட்ட ரூபா 67,887,468,424 தொகையில் உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (உ) சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவுகள்காசுப்பாய்ச்சல்கூற்றில்ரூபா 333,596,037 என காட்டப்படவேண்டிய போதிலும்அதுரூபா11,990,241இனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் பெறுமதி விபரமான ஒருங்கினைந்த பரீட்சைமீதியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்படல் வேண்டும். | கணக்குகளில் உண்மையாக விபரிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) அமைச்சின் விபரமான ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் பிரகாரம், மீளப்பெறப்பட்ட முற்பணங்கள் ரூபா 31,108,736 தொகையாக காணப்பட்ட போதிலும் இது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,230,582 என காட்டப்பட்டிருந்தது. அதனடிப்படையில், முதலீட்டு நடவடிக்கையிலிருந்து வழங்கப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 29,878,154 இனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | மீளப்பெறப்பட்ட முற்பணத் தொகை சுற்றறிக்கையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையாக காட்டப்படல் வேண்டும். | காசாலரிற்கு காசாக பெறப்பட்ட முற்பணம் காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறப்பட்ட முற்பணமாக காட்டப்பட்டிருந்தது. எதிர்பதிவின் மூலம் பெறப்பட்ட சம்பள முற்பணங்கள் ரூபா 11,990,241 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட ரூபா 321,605,796 எனும் சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவுகள் தொகையில் சீராக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (எ) அமைச்சின் விபரமான ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண கொடுப்பனவுகள் ரூபா 40,925,066 தொகையாகும் இது ரூபா 17,250,886 இனால் குறைத்துக்காட்டுவதனூடாக ரூபா 23,674,180 எனக் காட்டப்பட்டிருந்தது. | முற்பண கொடுப்பனவு பெறுமதி, சுற்றறிக்கையின் பிரகாரம் விபரமான ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் படி காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையாக காட்டப்படல் வேண்டும். | கணக்குகளில் உண்மையாக விபரிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஏ) அமைச்சின் விபரமான ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் பெறுவனவுகள மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 1,351,646,095 மற்றும் ரூபா 1,371,636,310 ஆக காணப்பட்ட போதிலும் அப்பெறுமதிகள் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முறையேரூபா1,351,879,462மற்றும்ரூபா 1,384,485,816 எனக்காட்டப்பட்டிருந்தது. | விபரமான ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் பிரகாரமான வைப்புபெறுவனவுகள்மற்றும் கொடுப்பனவுகள் சுற்றிக்கையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் முறையாக காட்டப்படல் வேண்டும். | வருமானத்திலிருந்தான மீள் கொடுப்பனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் வேறுவேறாக காட்டப்படாதிருந்ததனால், வருமானத்திலிருந்தான மீள் கொடுப்பனவுகள் வைப்புக் கொடுப்பனவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. |

### 1.6.3 முற்பண மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதி செயலாற்றல் கூற்றில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறைபாட்டு முற்பணமீதி ரூபா 89,209,564,017 ஆக காணப்பட வேண்டிய போதிலும், அது ரூபா 89,289,260,205 என ஒரு குறை மீதியாக காட்டப்பட்டிருந்தது. | நிதி செயலாற்றல் கூற்று சுற்றறிக்கையின் பிரகாரம தயாரிக்கப்படல் வேண்டும். | கணக்குகளில் உண்மையாக விபரிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 முற்பண சீராக்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரி புத்தகங்களின் படியான முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் அமைச்சின் விபரமான ஒருங்கிணைந்த பரீட்சை மீதிக்கும் இடையேயான ரூபா 12,875,249 வித்தியாசம் முற்பண சீராக்கல் கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மொத்த முற்பண பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கிடையேயான வித்தியாசம் முற்பண சீராக்கல் கணக்கில் கணக்கிடப்படல் வேண்டும். | மொத்த பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளை எதிர்காலத்தில் நிதி செயலாற்றல்கூற்றில்முற்பணகணக்கில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் விபரமான ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் பிரகாரம்இ வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 1,351,646,095 மற்றும் ரூபா 1,371,636,310 ஆக இருந்தது. இருப்பினும், திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் அப்பெறுமதிகள் முறையே ரூபா 1,373,147,081 மற்றும் ரூபா 1,617,026,030 ஆக காணப்பட்டது. அதனடிப்படையில், முற்பண சீராக்கல் கணக்கிலுள்ள அவ்வித்தியாசம் ரூபா 21,500,986 இனை செலவும் ரூபா 245,389,720 இனை வரவும் வைப்பதனூடாக சீராக்கப்படல் வேண்டும். இருப்பினும் இது முறையே ரூபா 290,306,013 மற்றும் ரூபா 233,366 என சீராக்கப்பட்டிருந்தது. | வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மாதாந்த கணக்கு சராம்சத்துடன் இணக்கம் செய்யப்பட்டு சீராக்கப்பட வேண்டியதுடன் உரிய பெறுமதிகள் அமைச்சின் விபரமான ஒருங்கினைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் காட்டப்படலும் வேண்டும். | திறைசேரி புத்தகங்கள் மற்றும் அமைச்சின் புத்தகங்களிடையேயான வைப்பு முற்பணங்கள் மற்றும் கொடுப்பனவுகள் வித்தியாசம் ரூபா 223,888,734 தொகையாக இருந்த போதிலும், அது முற்பண சீராக்கல் கணக்கில் ரூபா 290,072,647 என காட்டி சீராககப்பட்டிருந்தது. |

### 1.6.5 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்கொடுப்பணவுகளை இணக்கம் செய்வதற்கான கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இடமாற்றம், அவர்களது பதவியை இராஜினாமா செய்த மற்றும் ஓய்வு பெற்ற நெடுஞ்சாலைத்துறையின் அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 வருடங்களிற்கு மேலாக மீயப்பெறப்படாத கடன் மீதிகளின்மொத்தபெறுமதிரூபா 267,841 தொகையாக இருந்தது. | 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இல.118 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இடமாற்றப்பட்ட ஊழியர்கள் தொடர்பான 03 திருப்பிச் செலுத்தப்படாத கடன் மீதிகள் தொடர்பான சரியான தகவல்களை பெற்றுக் கொள்வது கடினமாகும். அக்கடன் தொகைகளை மீளப்பெற்றுக்கொள்ள அல்லது மாற்றல் பதிவுகளினூடாக சீராக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. |

### 1.6.6 வைப்புக்கள்

நிதிப்பிரமானம் 571(3) இன் பிரகாரம் வைப்புக்கணக்கில் காலவரயரையின்றி வைத்திருக்கும் வைப்புத்தொகை தாமத வைப்புத் தொகையாக இருக்கக் கூடாததுடன் கூடிய விரைவில் சூழ்நிலைகள் அல்லது திரும்பப் பெறல்களின் கீழ் உரிய கணக்கில் அல்லது வருமானத்தில் செலவுவைக்கப்பட வேண்டியிருப்பினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவின் முன்னைய அமைச்சரிற்கு வழங்கப்பட்ட இருப்புக்கள் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், அமைச்சரின் தனிப்பட்ட செயலாளரிற்கு சொந்தமான ரூபா 233,366 தொகையான அரச ஊழியர் சேமலாபநிதி 2015 திசெம்பர் 17 இல் இருந்து பொது வைப்புக்கள் கணக்கில் தக்கவைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமானம் 571(3) இன் பிரகாரம் தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பினும், இறுதி முடிவினை அடையமுடியாதுள்ளது. |
| (ஆ) | சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியான நெடுஞ்சாலை பிரிவுடன் தொடர்புபட்டதிரிகோணமலை-புல்மடு விலுள்ள ஒரு பாலத்தின் நிர்மானத்திற்காக பெறப்பட்ட மொத்தமாக ரூபா 88.23 மில்லியன் உரிய வேலைகள் செய்யப்படாமல் 2016 மார்ச் 31 இல் இருந்து பொது வைப்புகள் கணக்கில் தக்கவைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமானம் 571(3) இன் பிரகாரம் தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இப்பணத்தினை கொடுத்து தீர்த்து கணக்காய்விற்கு அறிக்கையிட உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தறுகின்றேன். |
| (இ) | பாதிக்கப்பட்ட வீதிகளின் புனர்நிர்மானத்திற்காக வைத்துக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 5.7 மில்லியன் வைப்பு உரிய வேலைகள் செய்யப்படாமல் 2011 ஏப்ரல் 01 இல் இருந்து பொது வைப்புகள் கணக்கில் தக்கவைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமானம் 571(3) இன் பிரகாரம் தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இப்பணத்தினை கொடுத்து தீர்த்து கணக்காய்விற்கு அறிக்கையிட உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தறுகின்றேன். |

### 1.6.7 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமானம் 891(1) இன் பிரகாரம், பாதுகாப்பு வைத்திருக்க வேண்டிய இனைத்த உத்தியோகத்தர்களினதும் தகவல்களை உள்ளடக்கிய காலவானி பதிவேடு பராமரிக்கப் பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பிற்காக வைத்திருக்க வேண்டிய தேவையுடைய உத்தியோகத்தர்களுடன் தொடர்புபட்டதகவல்களை உள்ளடக்கிய காவலாளி பதிவேடு நிதிப்பிரமானம் 891(1) இல் குறிப்பிட்டவாறு பேனப்படல் வேண்டும். | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவுடன் தொடர்புபட்ட காவலாளி பதிவேட்டினை எதிர்காலத்தில் பராமரிக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

### 1.6.8 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை தொடர்பாக பின்வரும் அதானிப்புக்கள் இடம்பெற்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான குறிப்புரை | அவதானிப்புக்கள்<br>இணங்காமை | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சோசலிச குடியரசின் நிதிப்பிரமானம்<br>(i) நிதிப்பிரமானம் இல 104(3) | அமைச்சின் நெடுஞ்சாலைகள் பிரிவுடன் தொடர்புபட்டு மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட அனைத்து வாகன விபத்துக்களின் ஆரம்பகட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்க 09 நாட்கள் தொடக்கம் 04 மாதங்கள் என்ற வீச்சிலான காலப்பகுதி எடுக்கப்பட்டிருந்ததுடன் 03 வாகன விபத்துக்களுடன் தொடர்புபட்ட ஆரம்ப கட்ட அறிக்கைகள் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவுடன் தொடர்புபட்டு 2019 ஆம் ஆண்டின்போதான 08 வாகன விபத்துக்களில் 04 ஏற்பட்டதனை தொடர்ந்து சுமார் ஒரு வருட காலம் கடந்திருப்பினும், ஆரம்ப கட்ட அறிக்கைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமானங்களுடன் உடன்படல் வேண்டும். | எப்.ஆர் 104(3) இன் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அனேகமான வாகனங்களின் ஆரம்பகட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்க தாமதமானதன் காரணம் அவைகள் கௌரவ அமைச்சரின் உத்தியோகத்தர்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்தமை மற்றும் கொழும்பு பகுதிக்கு வெளியே ஓடித்திரிந்ததனால் மேற்பார்வை நடவடிக்கைகளிற்கு கொண்டு வருதல் கடினமாக காணப்பட்டதுமாகும். இருப்பினும், ஒரு ஆரம்பகட்ட அறிக்கை தவிர்ந்த 2019 ஆம் ஆண்டின் போதான வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுடன் தொடர்புபட்ட வாகன விபத்துக்களுடன் தொடர்புபட்ட அனைத்து ஆரம்ப கட்ட அறிக்கைகளும் 2019 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஏனைய விபத்துக்களிற்கான ஆரம்ப கட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒரு விபத்து ஏற்பட்ட பின்னர் முழு அறிக்கை தயாரிக்க 07 நாட்களிற்கு மேல் தாமதம் ஏற்படும் என சிந்தித்தால் ஆரம்பகட்ட அறிக்கையை கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்ப பெற்றோலிய அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ii) இல 104(4) | விபத்து ஏற்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களிற்குள் முழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், ஆண்டின் போது நெடுஞ்சாலைகள் பிரிவில்ஏற்பட்ட11விபத்துக்கள்மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவில் ஏற்பட்ட 04 விபத்துக்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட முழு அறிக்கைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப்பிரமானங்களுடன் உடன்படல் வேண்டும். | தேவையான அறிக்கைகளை விரைவில் பெற்று கணக்காய்வாளர் அதிபதிக்க சமர்ப்பிக்க உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (ஆ) தேர்தல் ஆணைக்கழு தலைவரின் 2019 ஓகஸ்ட் 20 ஆம் திகதிய சுற்றறிக்கை இல இசி/இடிஆர்/01/ 2019 மற்றும் நிதிப்பிரமானம் 128(1)(I). | சட்ட அடிப்படையில் பொது நிதியினை பயன்படுத்துவதனூடாக பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் ஊடகங்கள் ஊடான பதவியுயர்வுகள் தேர்தல் காலங்களில் மற்றும் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்ட காலப்பகுதியில் வழங்கப்படலாகாது என்ற போதிலும், இதனை மீறி, ரூபா 5,553,154 தொகையான ஒரு செலவீடு பத்திரிகை அறிவிப்பை வெளியிட பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலாளரினால் செய்யப்பட்டிருந்தது. | தேர்தல் ஆணைக்கழு தலைவரின் 2019 ஓகஸ்ட் 20 ஆம் திகதிய சுற்றறிக்கை இல இசி/இடிஆர்/01/2019 மற்றும் நிதிப்பிரமானம் 128(1)(I) இன் நிபந்தனைகளை பின்பற்றல் வேண்டும். | இலங்கையில் பெற்றோலியம் மற்றும் எரிவாயு ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக மன்னாரின் கரையோரம் மற்றும் நிலப்பகுதிகள் மற்றும் காவேரி பேசின்களுடன் தொடர்புபட்ட செயற்திட்டங்களின் காற்று வெளியிடை மற்றும் காப்பு தரவு சேகரிப்பு திட்டத்தை தொடர்வது இலங்கையின் பெற்றோலிய தொழிலில் ஒரு தனித்துவமான வாய்ப்பாக இது பத்திரிகை அறிவிப்பினூடாக பொதுமக்களிற்கு விழிப்ப ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையான வேலைகளை ஊக்க மூட்டும் போது நாட்டின் நிலையை கருத்தில் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாக உத்தியோகத்தர்களிற்கு விபரிக்கப்பட்டுள்ளது. |
| (இ) 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 05/2008 | ஒரு குடிமகனின்/ வாடிக்கையாளர் பட்டயம் அறிமுகப்படுத்தப்பட்டிறாததுடன் பட்டயத்தின் தயாரிப்பு மற்றும் அமுல்படுத்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை மற்றும் கண்காணிக்க ஒரு முறைமை விருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் உடன்படல் வேண்டும். | நெடுஞ்சாலைகள் பிரிவுடன் தொடர்புபட்ட குடிமகனின்/ வாடிக்கையாளரின் பட்டய தயாரிப்பு நிர்வாக பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மும்மொழிவுகள் அனைத்து பிரிவுகளிடமிருந்தும் கோரப்பட்டுள்ளது. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவிற்கான மனிதவளங்கள் அபிவிருத்திற்கான திட்டங்களின் தயாரிப்பு தற்போது செய்யப்பட்டிருக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய பொத நிதி சுற்றறிக்கை இல.01/2014 இன் பந்தி 03(இ) | ஆண்டு நடவடிக்கைகளுக்கான முற்பண தேவைப்பாட்டு திட்டம் பெற்றொலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவின் ஆண்டு செயல்திட்டத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் உடன்படல் வேண்டும். | நீங்கள் குறிப்பிட்ட படி 2019 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் தயாரிக்கும் போது முற்பண தேவைப்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் உடன்படுவதுடன் அவ் விடயங்கள் 2020 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் தயாரிக்கும் போது உள்ளடக்கப்பட்டிருந்தது. |
| (உ) 2016 மார்ச் 31 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல 05/2016இன்பந்தி 03. | 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்ட ஆண்டுக்கான ஆய்வுவீரியம் குறித்த நேரகாலத்திற்குள் செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை நிபந்தனைகளுடன் உடன்படல் வேண்டும். | ஆய்வுவாரியம் உரிய திகதியில் செய்யப்பட்டு எதிர்காலத்தில் அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதனை பணிவுடன் அறியத்தருகின்றேன். |

**2. நிதி விமர்சனம்**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கப்பலூடான எண்ணெய் வர்த்தகர்களிடமிருந்து 2019 ஆம் ஆண்டிலிருந்து தற்போதைய வருடாந்த அனுமதி கட்டணத்தை ஐ.அ.டொலர் 1000 இலிருந்து ஐ.அ.டொலர் 5000 வரை அதிகரிப்பதற்கு பொது நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 ஒக்டோபர் 25 ஆம் திகதிய கடிதத்தினூடாக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவிற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. நிதிப்பிரமானம் 85(2)(ஆ) மற்றும் 2015 ஜுலை 20 ஆந்திகதிய நிதி கொள்கைகள் சுற்றறிக்கை இல 01/2015 இன் பந்தி 03 இன் பிரகாரம் திருத்தம் தேவைப்படின், அத்திருத்தங்களுக்கான காரணங்கள் உள்ளடங்களாக நிதிக்கொள்கைக் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படல் | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகள் சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் தயாரிக்கப்படல்வேண்டும். | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு தவறுதலாக 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| வேண்டும். இருப்பினும், அதனடிப்படையில் அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு, சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் பெற்றோலியவளங்கள்அபிவிருத்தி பிரிவினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை இதனால் ரூபா 31,418,859 வித்தியாசம் வருமான மதிப்பீடு மற்றும் வருமான அறவீடு என்பவற்றிற்கு இடையே அவதானிக்கப்பட்டது. இவ் வித்தியாசத்தை ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 92,000,000 உடன் ஒப்பிடும் போது இது 34 சதவீதமாக இருந்தது. | | |
| (ஆ) ரூபா 2,000,000 தொகையானமீளப் பெறமுடியாத வருமானம் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவினால் 2018 ஆம் ஆண்டின் போது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமானம் 113(3)(ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் திரைசேறி செயலாளரின் அனுமதி அதற்காக பெறப்பட்டிருக்கவில்லை. | மீளப் பெறமுடியாத வருமானங்களை தள்ளுபடி செய்ய நிதிப்பிரமானம் 113(3)(ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் அனுமதி பெறப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 2,000,000 தொகையான மீளப்பெறமுடியாத வருமானத்தை தள்ளுபடி செய்வதற்கான அனுமதியினை பெற 2019 திசெம்பர் 03 இல் திரைசேறி செயலாளரிற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. பதில் கிடைக்கப் பெறாததால் பொது நிதிதிணைக்களத்திற்கு மீண்டும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது |

## 2.2 செலவின முகாமைத்துவம்

துணை பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் பயன்படுத்தல், ஏற்பாடுகளின் பயன்படுத்தல்கள் மற்றும் சேமிப்புக்கள் ஊடாக ஏற்பாடுகளை பெறல் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் மதிப்பீடு, ஏற்பாடுகளின் மாற்றம் என்பன தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழ்காட்டப்பட்டுள்ளன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) செலவீடுகளின் வருடாந்த மதிப்பீடுகள்தயாரிக்கும்போது, மதிப்பீடுகள் நிதிப்பிரமானம் 50(ii) இன் பிரகாரம் முடிந்தவரை பூரணமாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்து அதன் பொறுப்பாகும். இருப்பினும், அமைச்சின் 07 செலவு விடயங்களிற்காக | முறையான மதிப்பீடு மற்றும் முறைமையான கற்கையுடன் மதிப்பீடுகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எப்.ஆர் 66 இன் கீழான மதிப்பீடுகள் மற்றும் மாற்றல்கள் ஊடான விடயங்களிற்கு வழங்கப்பட்ட மொத்த தேறிய ஏற்பாடுகள் வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் எதிர்பார்க்கப்பட்ட திருத்தங்களை அமுல்படுத்தாமை மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யாமைபோன்றகாரணங்களால் பயன்படுத்த மற்றும் சேமிக்க முடியாது போகக்கூடும். |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்ட ரூபா 10.5 மில்லியன் முழு தேறிய ஏற்பாட்டு பெறுமதி முறையான மதிப்பீடு மற்றும் திட்டமிடல் இல்லாமல் மதிப்பீடுகளை தயாரித்தமை மற்றும் ஏற்பாடுகளின் மாற்றங்கள் போன்ற காரணத்தினால் மொத்த ஒதுக்கீடுகளிலிருந்து எவ்வித தொகையையும் பயனபடுத்தாது சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) ஒரு விடயத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் போதாத சந்தர்ப்பங்களிள் மாத்திரமே துணை மதிப்பீடுகள் ஊடாக ஏற்பாடுகளை பெறவேண்டியிருந்த போதிலும், துணை மதிப்பீடுகள் ஒரு முறையான மதிப்பீடு இல்லாமல் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுபேறாக, 03 விடயங்களுடன் தொடர்புபட்ட துணை ஏற்பாடுகமூடாக அனுமதிக்கப்பட்ட ரூபா 15,696 மில்லியன் தொகையான மொத்த ஏற்பாட்டு பெறுமதி முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது. 06 செலவு விடயங்களுடன் தொடர்புபட்ட 70 சதவீதம் தொடக்கம் 90 சதவீதத்திற்கு இடைப்பட்ட துணை ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும், 01 செலவு விடயத்தடன் தொடர்புபட்ட ரூபா.225 மில்லியன் தொகையான துணை ஏற்பாடுகள் மொத்தமாக மற்றுமொரு செலவுவிடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | துணை மதிப்பீடுகள் பாதீட்டு ஏற்பாடுகள் போதுமானதாக இருக்கவில்லை என முறையான மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மாத்திரமே தயாரிக்கப்படல்வேண்டும். | துணைகளினூடாக அனுமதிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் ஏற்கனவே செலுத்தப்பட்ட ஐ.பீ.சி கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிராமை உள்ளடங்களாக, சாதகமற்ற காலநிலைகாரணமாகவெடிப்புமூலப் பொருட்களை வழங்குவதில் வரையரை, எதிர்பார்க்கப்பட்ட படி செலவுகள் எழாமை மற்றும் கையிலுள்ள பட்டியலிற்கு போதுமானதாக முற்பணம் கிடைக்காமை போன்ற காரணங்களினால் முழுமையாகவும் 70 சதவீதம் தொடக்கம் 90 சதவீதம் வரையான சேமிப்பும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (இ)அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு ஏற்பாடுகளிற்குரிய 11 செலவு விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 9,166.7 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் உரிய செலவு விடயங்களிற்கு எவ்வித செலவுகளும் ஏற்படாமல் எப்.ஆர் 66/69 இனூடாக மற்றய செலவுவிடயங்களிற்கு முழுமையாக மாற்றப்பட்டிருந்தது. | பாதீட்டு மதிப்பீடுகள் உண்மையாக அடயாளப்படுத்தப்பட்ட செலவுத் தேவைப்பாடுகளிற்கு மாத்திரமே தயாரிக்கப்படல்வேண்டும். | எப்.ஆர் 66/69 இனூடான ஏனைய செலவு விடயங்களிற்கான மாற்றல்கள் அவசர பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை செய்யாமை உள்ளடங்களான ஆண்டின் போது எதிர்பார்த்த செலவகள் ஏற்படாமை, வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் வரையறை, இராஜாங்க அமைச்சரினால் உத்தியோகபூர்வ குடியிருப்பு பெறப்படாமை மற்றும் கடன் உடன்படிக்கைகள் |

| | | |
|---|---|---|
| | | கையொப்பமிடப்படாமை போன்ற காரணங்கள் காரணமாக செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) மதிப்பீடுகளானது மொத்தமாக ரூபா 168,567.2 மில்லியன் தேரிய ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததற்குரிய 72 செலவு விடயங்களுடன் தொடர்புபட்ட முறையான எதிர்பார்க்கை இல்லாது தயார்க்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுபெறாக, 25 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் என்ற வீச்சிக்குற்பட்ட ரூபா 100,347.3 மில்லியன் மொத்த பெறுமதியடய தேசிய ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | செலவீடுகளின் மதிப்பீடுகள் முறையான எதிர்பார்கைகளுடன் தயாரிக்கப்படல்வேண்டும். | 72 செலவவிடயங்கள் தொடர்பான 25 சதவீதம் தொடக்கம் 99 சதவீதம் வரையான சேமிப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட படி செலவுகள் ஏற்படாமை, செலவுகளின் கட்டுப்பாடு, பழுதுபார்த்தல் கிரயம் ஏற்படாமை, உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடம், மேலதிக நேர கொடுப்பனவுகளின் வரையறை, உத்தியோகத்தர்களின் குறைபாடு, வரையறுத்த உள்நாட்டு சுற்றுலாக்கள், வெளிநாட்டு பயிற்சித்திட்டங்களிற்காக வரையறுத்த கலந்து கொள்ளல், சீறுடை கொடுப்பனவுகளிற்கு தகுதியான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையில் வரையறை, வாகன பராமரிப்பு கிரயத்தின் வரையறை, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் குறைவடைவு, தளபாட மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படாமை, அமைச்சின் செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பின்மை, எதிர்பார்க்கப்பட்ட படி சீசீடிவி முறைமை மற்றம் தன்னியக்க கொடுப்பனவு முறைமைக்கான செலவுகள் ஏற்படாமை, வெடித்தல் மூலப்பொருட்களை வழங்குவதில் வரையறை மற்றும் போதுமானளவு முற்பணங்கள் கிடைக்கப் பெறாமை போன்ற உள்ளடங்காக பல்வேறு காரணங்களினால் ஏற்பட்டிருந்தது. |
| (உ) செலவினங்களின் ஆரம்ப மதிப்பீடுகள் மற்றும் திருத்தியமைக்கப்பட்ட செலவின மதிப்பீடுகள் என்பவற்றிற்கிடையேயான மாறல் அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்ட வருடத்திற்கான மதிப்பீடுகளின் | வருடத்திற்கான செலவு மதிப்பீடுகள் நிலையான திட்டத்திற்கு உட்படுத்தப்படாமல் முறையான எதிர்நோக்குடன் தயாரிக்கப்படல்வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடகளின் தேவைப்பாட்டிற்காக பல்வேறு கொடுப்பனவு பிரிவுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 522 பில்லியன் தேவைப்பாடு ரூபா 280 பில்லியனிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. தேசிய |

| | | |
|---|---|---|
| தயாரிப்பில் குறைபாடுகள் காரணமாக 25 சதவீதம் தொடக்கம் 900 சதவீதம் வரையான வீச்சிக்குள் காணப்பட்டது. | | பாதீட்டு திணைக்களத்துடன் கலந்துரையாடிய பின்னர், உச்சபட்ச வரையறையை ரூபா 175 பில்லியன் வரைந்து சமர்ப்பிக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, ரூபா 175 பில்லியன் தொகையான ஏற்பாடுகளிற்கான அனுமதி பெறப்பட்டிருந்தது. மேற்கூறிய ஏற்பாடுகளில், 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தகிட்டத்தட்டரூபா 55 பில்லியன் ஒப்படைப்புக்கள் கொடுத்து தீர்க்கப்பட வேண்டி காணப்பட்டது. |
| (ஊ)12 செலவு விடயங்களுடன் தொடர்புபட்ட நிதிப்பிரமானம் 66/69 இன் பிரகாரமான மற்றல்களின் கீழாக பெறப்பட்ட ரூபா 5,076.6 மில்லியன் மொத்த பெறுமதியுடய மேலதிக ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | வருடத்திற்கான செலவு மதிப்பீடுகள் நிலையான திட்டத்திற்கு உட்படுத்தப்படாமல் முறையான எதிர்நோக்குடன் தயாரிக்கப்படல்வேண்டும். | எதிர்பார்க்காதபடியானமேலதிகநேர வேலைகளின் வரைறறை, கூட்டங்களின் வரையறை காரனமாக எதிர்பார்த்த செலவுகள் எலாமை, செலுத்திய ஐ.பி.சி கணக்குகளிற்கு எடுக்கப்படாமை, போதியளவான முற்பணங்கள் கிடைக்கப் பெறாமை, எதிர்பார்த்தபடி செலவுகள் ஏற்படாமை மற்றும் சிவில் வேலைகள் மற்றும் ஆலொசனை வேலைகளிற்கான வரிவிலக்கு என்பன முழு சேமிப்பு மற்றும் நிதிப்பிரமானம் 69/66 இன் பிரகாரமான மற்றல்களின் கீழாக பெறப்பட்ட மேலதிக ஏற்பாடுகளை பயன்படுத்தாமை என்பவற்றை பாதித்திருந்தது. |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடைமைகளிற்குள் உள்ளாகுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொடர்ந்து பொறுப்பு பதிவேட்டை சரிபார்த்து எப்.ஆர்.214 இன் பிரகாரம் கொடுத்து தீர்க்க நடவடிக்கை எடுத்திராததால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான தீர்க்கப்படாத ஒப்படைப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 40,465 மில்லியனாக இருந்தது. | நிதிப்பிரமானம்214 உடன் இணங்க வேண்டும். | தொடர்ந்து பொறுப்பு பதிவேட்டை சரிபார்க்கப்பட்டு கொடுத்து தீர்க்க நடவடிக்கை எடுக்காதிருப்பினும்இ வருடாந்த மதிப்பீடுகள் வரையறுக்கப்பட்டிருந்ததன் கீழ் கொடுக்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து ரூபா 40,465 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் கானப்பட்டன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நடைமுறை ரீதியாக அடய கடினமான இலக்குகள் வருடாந்த செயலாற்றல் திட்டம் தயாரிக்கையில் தொடர்புடய செயற்திட்டங்களிற்கு தொகுக்கப்பட்டிருந்தது. மேலும், 2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட நிதி ஒதுக்கங்களை கருத்தில் கொள்ளாது, மற்றுமொறு பெறுமதி பாதீட்டு ஒதுக்கிடாக காட்டப்பட்டிருந்தது. | நடைமுறைரீதியாக அடயக்கூடிய இலக்குகள் செயலாற்றல் திட்டம் தயாரிக்கையில் தொகுக்கப்படல் வேண்டும். | நெடுஞ்சாலைகள் பிரிவின் கீழ் அமுல்படுத்தப்பட்ட அனேக செயற்திட்டங்கள் வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்ங்களாக இருந்ததுடன் செயற்திட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. எனவே, நடைமுறைரீதியாக அடயக்கூடிய பௌதீக இலக்ககள் செயற்திட்ட காலப்பகுதியுடன் ஒப்பிடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் சட்ட பிரச்சினைகள், காணி சுவீகரிப்பு செயன்முறையிலுள்ள பிரச்சினைகள் மற்றும் முற்பணங்களின் குறைபாடு என்பன எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்ககளின் பூரணத்துவத்தை தடுக்கின்றன.<br>அடுத்தவருடத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆண்டுக்கான செயலாற்றல் திட்டமானது உரிய வருடத்தின் திசெம்பர் 31 இற்கு முன்னர் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால், 2019ஆம்ஆண்டிற்காகதயாரிக்கப்பட்ட செயலாற்றல் திட்டம் 2018 திசெம்பர் 28 இல் தேசிய பாதீட்டு திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது(இணைப்பு5). 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் நிதி அமைச்சினால் உரிய திகதியில் முடிவுறுத்தப்படாததினால், எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு செயலாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.பின்னர்,2019 சனவரி தொடக்கம் ஏப்ரல் வரைக்குமாக தயாரிக்கப்பட்ட வாக்குக்கணக்கு 2019 சனவரி 03 இல் இவ் அமைச்சிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் வருடாந்த செயலாற்றல் திட்டத்திலுள்ள பாதீட்டு ஒதுக்கீடுகளின் படி வாக்கு கணக்கில் நிதி ஒதுக்கீட்டை உள்ளடக்க எவ்வித சந்தர்ப்பமும் காணப்படவில்லை. |

## 3.2 நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் தோல்வி

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவுடன் தொடர்பான செயலாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 07 நடவடிக்கைகளில் ரூபா 50 மில்லியன் ஒதுக்கீடுகளை கொண்ட 05 நடவடிக்கைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 10 மில்லியன் தொகையுடைய ஏற்பாடுகளுடனான 02 நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்கு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் திட்டத்தில் உரிய வருடத்தின் போதான மும்மொழியப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கவும் இலக்குகளை நிபர்த்திசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இச்செயற்திட்டங்கள் பெறுகை செயன்முறைக்காக எதிர்பார்க்கப்பட்டதை விட அதிக நேரம் எடுத்திருந்தமை உள்ளடங்களாக, சட்ட விடயங்கள் தொடர்பாக சட்டமாஅதிபர் திணைக்களத்திடமிருந்து அறிவுறுத்தல்கள் பெற வேண்டி இருந்தமை, காலநிலை மாற்றங்கள் காரணமாக நிர்மான வேலைகள் பாதிப்படைந்திருந்தமை மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து அனுமதிகள் பெறப்பட வேண்டி இருந்தமை போன்ற காரணங்களின் காரணமாக குறித்த காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யமுடியாமல் இருந்தது. |
| (ஆ) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவின் நிர்வாக அபிவிருத்தி, பெறுகை, நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு போன்ற துறைகளை நிபர்த்தி செய்ய தயாரிக்கப்பட்ட செயலாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 35 நடவடிக்கைகளில், 05 நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றல் திட்டத்தில் உரிய வருடத்தின் போதான மும்மொழியப்பட்ட நடவடிக்கைகளை உள்ளடக்கவும் இலக்குகளை நிபர்த்திசெய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இச்செயற்திட்டங்களை பூர்த்தியாக்கமுடியாது போனாலும் அவைகள் சட்டமாஅதிபர் திணைக்களத்திடமிருந்து சட்டவிளக்கங்களை பெறுவதற்கு அதிக நேரம் எடுத்திருந்ததால் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. |

## 3.3 அமைச்சின் குறிக்கோலிற்கினங்க செயற்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எரிபொருள் விற்பனைக்காக நாடளாவிய ரீதியில் 1461 எரிபொருள் நிலையங்கள் காணப்பட்டது மேலும் அதில், 1254 எரிபொருள் நிலையங்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாகவும் ஏனைய 207 எரிபொருள் நிலையங்கள் | குறிக்கோல்களை அடைந்து கொள்வதற்காக உரிய கொள்கை நிகழ்ச்சித்திட்டங்கள், செயற்திட்டங்களின் உருவாக்கம் பின்விசாரணைகள் மற்றும் மதிப்பாய்வுகள் திறம்பட செய்யப்படல் வேண்டும். | எரிபொருள் வளங்களில் தரம் மற்றும் நம்பகதன்மையை மேம்படுத்தும் விடயத்தின் கீழாக பெற்றோலியத்தின் நியமங்களை மேம்படுத்த அல்லது உருவாக்க இலங்கை நியமங்கள் நிறுவனம், கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனம் மற்றும் பொது பயன்பாடுகள் |

| | | |
|---|---|---|
| இலங்கை இந்தியன் ஒயில் கம்பனிக்கு சொந்தமாகவும் இருந்தது. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரிவின் ஒரு விசேட கண்காணிப்பு அணி இவ் எரிபொருள் நிலையங்களின் அலுவல்களை சரிபார்க்க நியமிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 1461 எரிபொருள் நிலையங்களில் 73 எரிபொருள் நிலையங்கள் இவ் அணியினால் கண்காணிப்பு செய்யப்பட்டிருந்தது. அவைகளில், 38 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் 28 எரிபொருள் நிலையங்கள் மோசமான நிலைமையில் காணப்பட்டது. மேலும், இலங்கை இந்தியன் ஒயில் கம்பனிக்கு சொந்தமான 207 நிலையங்களில் 03 எரிபொருள் நிலையங்கள் மாத்திரமே 2018 ஆம் ஆண்டின் போது பௌதீக ரீதியாக கண்காணிக்கப்பட்டிருந்ததுடன் அவைகளில்02நிலையங்கள்சாதாரண மோச நிலையில் காணப்பட்டது. கம்பஹா மற்றும் காலி மாவட்டங்களிலுள்ள 24 எரிபொருள் நிலையங்கள் தொடர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கண்காணிப்பின் போது 21 எரிபொருள் நிலையங்களின் எரிபொருள் வளங்கள் சேவையில் கணிசமான அளவு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன. | | ஆணைக்குழு போன்ற மூன்று நிறுவனங்களுடன் சேர்ந்து அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. மேலும், எரிபொருள் நிலையங்களை கண்காணிக்க மேலும் செயற்திறனான நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்க கலந்துறையாடல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. |

**3.4 எதிர்பார்த்த வெளியீடுகளை அடைந்திராமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் திட்டத்திற்கான, வழமையான பராமரிப்பு நடவடிக்கைகள், காலரீதியான பராமரிப்பு நடவடிக்கைகள், கட்டமைப்புக்களின் பராமரிப்பு சமிஞ்சை விளக்குகளின் பராமரிப்பு மற்றும் 12,220 கி.மீற்றர்களின் விஸ்தரிப்பு, சுமார் 4,660 பாலங்கள் மற்றும் 12 மேம்பாலங்களுடனான தேசிய நெடுஞ்சாலைகளின் அவசர வேலைகள் போன்றவற்றினை | குறித்த ஆண்டின் போது பராமரிக்க எதிர்பார்கப்பட்ட வீதிகள் நிச்சயமாக வகைப்படுத்தப்பட்டு அடையாளப்படுத்தப்படல் வேண்டும். | முழு தேசிய வீதி வலையமைப்பிற்கான வீதி பராமரிப்பு நம்பிக்கை நிதியத்தின் கீழாக அமுல்படுத்தப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களை பராமரிப்பு நடவடிக்கைகள் செய்ய வேண்டியதில்லை. வீதிகளின் நீளம் மற்றும் குறித்த ஆண்டின் போது பராமரிக்க வேண்டிய பாலங்களின் எண்ணிக்கை என்பன முன்னுரிமை அடிப்படை மற்றும் ஏற்பாடுகளின் ஒதுக்கீடுஎன்பவற்றின்அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கிய 100 வேலை உருப்படிகளின் பௌதீக இலக்குகளைஅடைந்துகொள்ளவீதி பராமரிப்பு நம்பிக்கை நிதியத்தினால் திட்டமிடப்பட்டிருந்தது<br>இருப்பினும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகங்களின் வரம்பின் கீழான இப்பராமரிப்பு நடவடிக்கைகளில் இருந்து 09 மாகாணங்களை உள்ளடக்கிய 357.63 கி.மீற்றர்கள் மாத்திரமே மீளாய்வாண்டின் போது பராமரிக்கப்படடிருந்தது. | | |
| (ஆ) ருவன்புர அதிவேகப்பாதையின் நிர்மான நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்த பாதீட்டு ஏற்பாடு ரூபா 500 மில்லியன் தொகையென செயலாற்றல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பௌதீக செயலாற்றல் தொடர்பான இலக்குகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் படி இச் செயற்திட்டதிற்காக ரூபா 50 மில்லியன் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது, அதில், மொத்தமாக ரூபா 14 மில்லியன் நிதிப்பிரமானம் 66 இன் கீழ் ஏனைய செலவு விடையங்களிற்கு மாற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது | இலக்கிடப்பட்ட பௌதீக செயலாற்றல் வருடாந்த செயலாற்றல் திட்டத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். | ருவன்பர அதிவேகப்பாதை திட்டத்தின் நிர்மான நடவடிக்கைகளிற்கான ஆரம்ப முற்பண கொடுப்பனவு 2019 ஆம் ஆண்டின் 4 வது காலாண்டில் செய்ய திட்டமிடப்பட்டிருந்தது எனவே, அத்தொகையை கருத்தில் கொண்டும் கூட, நிதி இலக்குகள் வருடாந்தசெயலாற்றல்திட்டத்தினை தயாரிக்கும்போதுரூபா500மில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவுகள் செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு செயன்முறையில் தாமதம் காரணமாக செய்யப்பட்டிருக்கவில்லை.<br>இதனால், அக்காசு வினைத்திறனான நிதிப்பயன்பாட்டிற்காக ஏனைய நிதி ரீதியாக தேவையுடைய செயற்திட்டங்களிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. |
| (இ) புதிய களனிப்பாலம் தொடக்கம் ராஜகிரிய வரையான உயர்திய நெடுஞ்காலை செயற்திட்டத்தின் கீழான 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்ட நிர்மான நடவடிக்கைகளிற்கான செயலாற்றல் திட்டத்தில் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிராததுடன் 20 சதவீதமான ஒரு பௌதீக செயலாற்றலும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.<br>வருடாந்த மதிப்பீட்டில் மொத்தமாக ரூபா 125 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அடையப்பெற்ற பௌதீக செயலாற்றல் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றலை மதிப்பிடும் போது இலக்கிடப்பட்ட பௌதீக செயலாற்றலின் அடைவுகள் கூட மதிப்பிடப்படல் வேண்டும். | புதிய களனிப்பாலம் தொடக்கம் அத்துருகிரிய வரையான உயர்திய நெடுஞ்சாலை செயற்திட்டதின் பௌதீக செயலாற்றல்கள் வடிவமைப்பு மற்றும் நிர்மானம் இரண்டிற்குமான இற்குமான நடவடிக்கைகளிற்கான20சதவீதமாக குறிப்பிடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக ஒரு தகுதியான முதலீட்டாளரை தெரிவு செய்யும் போது ஏற்பட்ட நடைமுறை ரீதியான பிரச்சினைகள் காரணமாக வடிவமைப்பு அல்லது நிர்மான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட படி அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) கொழும்பு மாவட்டத்தின் தேசிய வீதி வலையமைப்பின் மேம்படுத்தல் ஊடாக நகரப்பகுதிகளில் வீதி வாகன நிலைமைகளை குறைக்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களின் கீழாக புனரமைக்கப்பட்ட ஒருகொடவத்த - அம்பத்தல வீதியின் முதல் பகுதி தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 45 சதவீதமாக காணப்பட்ட அதேவேளை உண்மைச் செயலாற்றல் 29 சதவீதமாக காணப்பட்டது. ஒருகொடவத்த அம்பத்தல வீதியின் இரண்டாம் ஆம் பகுதியின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 10 சதவீதம் என்றாலும் உண்மை செயலாற்றல் 0.2 தொகையாகும். கோட்டே - போபோப்பே வீதியின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 34 சதவீதமாக காணப்பட்ட அதேவேலை உண்மைச் செயலாற்றல் 25 சதவீதமாக காணப்பட்டதுடன் கொட்டாவ – தலகல வீதியின் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் 49 சதவீதமாக காணப்பட்ட அதேவேளை உண்மைச் செயலாற்றல் 29 சதவீதமாக இருந்தது. மாவின்ன – பொரலஸ்கமுவ வீதியின் புனர்நிர்மான நடவடிக்கையை அமுல்படுத்துவதில்லை என தீர்மானிக்கப்பட்டிருந்தது.அதனடிப்ப டையில், இச் செயற்திட்டத்தின் செயலாற்றல் மிகவும் குறைந்தளவான நிலையில் காணப்பட்டது. | இலக்கிடப்பட்ட பௌதீக செயலாற்றலை அடைந்து கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கொழும்பு மாவட்டத்திலுள்ள தேசிய வீதி வலையமைப்பு மேம்படுத்தல் திட்டத்தின் கீழாக புனரமைக்கப்பட்ட அனைத்து வீதிகள் தொடர்பாக திட்டமிட்ட படி 100 சதவீதமான பௌதீக இலக்குகளை அடைவதில் தோல்வி ஏற்பட்டமைக்கான பிரதான காரணம் காணி சுவீகரிப்பு செயன்முறையின் தாமதங்கள் மற்றும் பிரச்சினை ரீதியான நிலமையும் ஆகும். |

## 3.5 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2004 ஆம் ஆண்டிலிருந்து பெற்றோலிய துறைக்காக ஒரு ஒழுங்கான அதிகாரம் இல்லாததனால், ஒரு தீர்மானம் 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்கழு சட்டத்தினால் பெற்றோலிய துறையை | புதிய சட்டங்களை மாற்றியமைத்து அனுமதியினை பெற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | இச் சட்டத்தின் மாற்றியமைப்பு தொடர்பாக தற்போதைய விடய அமைச்சருடன் கலந்துறையாடல்கள் செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கவும் அதேபோல் துறைகளின் கீழ் ஒழுங்குபடுத்தவும் 2006 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது. அதன்படி ஆரம்ப வேலைகள் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கான துறையின் கட்டுப்பாட்டிற்காக தேவைப்பட்ட உபகரணங்களை வழங்குவதற்காக 2002 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திகள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க லங்கா பெற்றோலிய கூட்டுத்தாபன சட்டம் போன்றவற்றை மாற்றியமைக்க 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட இது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | | வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருந்தது. அதன்படி, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதி 2002 இன் 33 ஆம் இலக்க பெற்றொலிய உற்பத்திகள் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தை திருத்துவதற்கான வரைபு சட்ட தயாரிப்பிற்காக 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்தது. எனவே அது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களமிடமிருந்தான ஒரு உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்ள தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2015செப்டம்பர் 21 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சுக்கு இயற்கை வாயு சம்பந்தமான தேசிய கொள்கை ஒன்று உருவாக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2018 ஜுன் மாதமளவில் இயற்கை வாயு சம்பந்தமான தேசிய கொள்கைகளை வகுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை இது நிறைவு படுத்தப்படவில்லை. | உரிய கொள்கைகளை அனுமதிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத் தேசிய கொள்கை அமைச்சரவை அனுமதிக்காக 2019 திசெம்பர் 28 இல் மீளவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் இல.20/0234/226/015 தீர்மானத்தின்படி ஒரு நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டு இக்கொள்கையினை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. இத்தேசிய கொள்கையானது அக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது இதன் அறிக்கையினை பெற்றுக்கொண்டு அமைச்சரவை அனுமதிக்கு சமர்ப்பிப்பதற்கான வழிகளை மேற்கொள்ளலாம். |
| (இ) | திருகோணமலை துறைமுகத்தில் 1930 ஆம் ஆண்டிலிருந்து அமைக்கப்பட்டுள்ள இந்த எண்ணெய்த் தாங்கிகள் அமைப்பு முறையில், 12,500 திரவ கன மீட்டர் கொள்ளளவுள்ள 102 தாங்கிகளும் அதனோடு இணைந்த வசதிகளையும் கொண்டுள்ளது. தற்போது மீதமுள்ள 99 தாங்கிகளில் 14 தாங்கிகளின் கீழ்மட்ட பகுதிகளை லங்கா இந்தியன் கம்பெனி ஆனது பயன்படுத்தி வருகின்றது. கைவிடப்பட்டிருந்த 84 மேல்மட்ட தாங்கிகளை இயங்க வைக்க புனரமைப்பு செய்வதற்கான ஆரம்பகட்ட தீர்மானங்கள் 2015 ஏப்ரல் 29 இல் தொடங்குவதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 | நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய எதிர்கால வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மேல்மட்டத்தில்உள்ள85தாங்கிகள் அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் லங்கா இந்தியன் கம்பெனியும் இணைந்து ஒரு கம்பெனியை உருவாக்கி இருந்த வேளையில், நிதி அமைச்சரும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு இலங்கை இந்தியன் எண்ணை கம்பெனிக்கும் கம்பெனியின் பங்குகளை வாங்கும் படி அறிவிக்கப்பட்டது. இருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பொது ஊழியர்களின் தொழிற்சங்கமும் நிறைவேற்று உத்தியோகத்தர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | டிசம்பர் 20 வரை அபிவிருத்தி புனரமைப்பு வேலைகள் செய்யப் பட்டிருக்கவில்லை. | | தொழிற்சங்கமும் உச்ச நீதி மன்றத்தில் இது தொடர்பாக ஒரு வழக்கினை தொடர்ந்திருந்தது. |
| (ஈ) | காங்கேசன்துறையில் சீமெந்து கூட்டுத்தாபணத்திற்கு சொந்தமான காணிகளில் நிர்மானிக்கப்பட்ட எண்ணெய்கிடங்கினை மீள்கட்டமைக்க 2016 ஒக்டோபர் 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தினூடாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தினால் சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தவேண்டிய மொத்தமாக ரூபா 142.98 மில்லியன் செலுத்தப்பட்டிராததுடன் அதன் பெறுபேறாக இச் செயற்திட்டம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட அமுல்படுத்த முடியாமல் போயிருந்தது. | வேலைகளை துரிதப்படுத்தவும் மிகுதிப்பனத்தை கொடுத்து தீர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வாடகை ஒப்பந்தத்தினை தயாரித்த பின்னரே வாடகைக்கு விடும் படி காணிகள் அமைச்சானது தில்பால பிரதேச செயலகத்திற்கு அறிவித்திருந்ததுடன் இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையமானது காணி மதிப்பீடு அறிக்கைகளை தயாரிக்க நிலஅளவை திட்டத்தினை ஆரம்பிக்கும் படி அறிவித்திருந்தது. |
| (உ) | இலங்கையின் கடல் சார் பகுதிகளை இலக்காக கொண்டு நாடளாவிய ரீதியில் கடல்சார் சுற்றுச்சூழல் தரவுகளை சேகரிக்கும் ஒரு ஆராய்ச்சி திட்டத்தை நிறுவ தேசிய நீர்வாழ் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவருடன் (என்ஏஆர்ஏ நிறுவனம்) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தினால் 2015 செப்டம்பர் 30 இல் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. 2018 செப்தம்பர் 28 இல் உள்ளவாறு, செயற்திட்டமானது என்ஏஆர்ஏ நிறுவனத்திற்கு அதன் மொத்த ஒப்பந்த விலை ரூபா 37,165,183 இனை செலுத்தியிருந்தது. ஆனால் தரவுகளை உள்ளடக்கிய இணையத்தள சேர்வர் தரவுகளைப்பற்றிய முறையான புரிந்துனர்வு குறைந்தளவான உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைப்பாடு என்பவற்றுடன் தகவல் முறைமையை செயற்படுத்தக்கூடிய பயிற்சியளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் குறைபாடு காரணமாக 2019 முடிவில் கூட பெற்றொலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தில் நிறுவப்பட்டிருக்கவில்லை. | பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகத்தில் இணையத்தள சேர்வரினை நிறுவ தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். | இலங்கையின் கடல்சார் பகுதிகளை இலக்கிட்டு நாடளாவிய ரீதியில் சுற்றாடல் தகவல்களை சேகரிப்பதன் செயற்திட்டதிற்கு மிகவும் பிரபலமான நிறுவனமான தேசிய நீர்வாழ் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவருடன் செய்யப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில், அவர்கள் அந் நடவடிக்கைகளை பூர்த்திசெய்திருந்ததுடன் தகவல் முறைமையும் செயற்படுத்தப்பட்டிருந்தது. இணையத்தள சேர்வரின் மற்றும் தரவுத்தள் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வேறான ஒரு உப உடன்படிக்கையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | இலங்கையின் கிழக்கு மாகாண கரையோர பட்டியின் ஜேஎஸ் 5 மற்றும் ஜேஎஸ் 6 காணித்துண்டுகளில் ஆய்வு நடவடிக்கைகளுக்காக 2016 பெப்ரவரி 18 இல் இலங்கை அரசாங்கம் மற்றும் பிரான்சின் அனைத்து கம்பனிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்டஒருங்கினைந்தஆய்வு உடன்படிக்கை கையொப்பமிடும் போது பூர்த்திசெய்யப்படவேண்டிய முன் நிபந்தனைகள் பற்றி கருத்தில் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே செயற்திட்ட நடவடிக்கைகளின் ஆரம்பிப்பு2019ஆகஸ்ட்27இல்மீண்டும் மீளமைக்கப்பட்ட ஒருங்கினைந்த உடன்படிக்கையை ஏற்படுத்தும் வரை ஆரம்பத்தில் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் படி தாமதமாக காணப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இச் செயற்திட்டத்திற்காக 2016 பெப்ரவரி 18 இல் இலங்கை அரசாங்கம் மற்றும் பிரான்சின் அனைத்து கம்பனிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்காக தேவையான பிண்ணனியினை தயாரிக்கும் வரை செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதமாக காணப்பட்டன. அதனடிப்படையில் இவ் உடன்படிக்கை உடன்படிக்கையின் உபபிரிவு 3.1 இன் பிரகாரம் 2018 பெப்ரவரி 18 இல் நிறைவடைந்திருக்கவில்லை.<br>எனவே 2016 இல் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை 2019 ஆகஸ்ட் 27 இல் மீளமைக்கப்பட்ட ஒருங்கினைந்த உடன்படிக்கையை ஏற்படுத்தும் வரை நடைமுறையில் இருந்தது. |
| (எ) | அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி இலங்கையின் கிழக்கு மாகாணம் மற்றும் மேல்மாகாணத்தின் கடல்சார் பட்டியை சூழ்ந்த இருமுகட்டு மற்றும் இஸ்டக் தரவுசேகரிப்ப திட்டத்திற்காக 2016 செப்டம்பர் 06 இல் பெறப்பட்டிருந்தது. இச் செயற்திட்டமானது நாட்டிற்கு பொருளாதார ரீதியாக விசேடமானதிலிருந்து பொருளாதார முகாமைத்தவத்திற்கான அமைச்சரவை குழு முன்னுரிமை அடிப்படையில் உகந்ததாக இச்செயற்திட்டத்தை அமுல்படுத்த அறிவுறுத்தியிருந்தது. இருப்பினும் அமைச்சரவை தீர்மான திகதியிலிருந்து 2018 மே 30 இல் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்ட திகதி வரை 1½ வருடங்களிற்கு மேலாக இச் செயற்திட்டம் தொடர்பாக ஒப்பந்தத்தில் ஈடுபட தாண்டியிருந்தது. | இலங்கையின் கரையோர பிராந்தியத்தை சுற்றியுள்ள பெற்றோலிய வளங்களை அடையாளம் காணவும் உரிய அதிகார சபைக்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான தகவல்களை விரைவாக வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒரு ஒருங்கினைந்த கற்கை உடன்படிக்கை இலங்கையின் கிழக்கு மாகாண கரையோரத்திலுள்ள ஜேஎஸ்5 மற்றும் ஜேஎஸ்6 காணித்துண்டுகளை கருத்தில் கொண்டு 2016 பெப்ரவரி 18 இல் இலங்கை அரசாங்கம் மற்றும் பிரான்சின் அனைத்து கம்பனிகளுக்குமிடையே ஏற்படுத்தப்பட்டிருந்தது.<br>இவ் உடன்படிக்கையின் பிரதான நோக்கம்நிலவியல்,பூகோல மற்றும் தொழிநுட்ப ஆய்வு சேகரிக்கப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதனூடாக 2 காணித்துண்டுகளில் பெற்றோலிய வளங்கள் தொடர்பாக தேடல் நடவடிக்கையை முன்னெடுப்பதாகும். இவ் ஒருங்கினைந்த உடன்படிக்கையின் அமுல்படுத்தலிற்காக இவ் உடன்படிக்கையின் பிரிவு 8 இன் பிரகாரம் புதிய இருமுகட்டு நில அதிர்வு தரவு தேவைப்படினும் உடன்படிக்கையானது அத்தரவுகள் இல்லாது ஏற்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஏ) | காரின் லங்கா ( தனியார்) கம்பனி 2007 இன் சர்வதேச ஏல செயன்முறையின் ஒரு சுற்றக்கிய பின்னர் மன்னார் பேசில் உள்ள எம்2 காணித்துண்டில் பெற்றோலியத்தின் ஆய்வு நடவடிக்கைகளிற்காக தெரிவு | உரிய அதிகார சபைகள் பெற்றோலியத்தின் அகல்வாராய்ச்சி நடவடிக்கைகளிற்காக முன்னுரிமை அளிப்பதன் முக்கியத்தவம் பற்றி கவனம் | எம்2 காணித்துண்டில் அகல்வாராய்ச்சி நடவடிக்கைகளிற்காக 2007 இன் ஏல நடமுறையினூடாக தெரிவு செய்யப்பட்ட காரின் லங்கா (தனியார்) கம்பனி அதன் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்ததுடன் இரண்டு இயற்கை வாயு படிவுகள் 2011 இல் அகல்வாராய்ச்சி முடிந்ததிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது மன்னார் பேசில் உள்ள அகல்வாராய்ச்சிகள் இக்கம்பனியினால் பாதி நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2015 ஒக்டோபர் 15 இல் உடன்படிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதன்பின்னர் இக்காணித்துண்டுகளில் அகல்வாராய்ச்சி நடவடிக்கைகள் எவ்வித செயலாற்றலையும் அடைந்திராமல் 2015 ஆம் ஆண்டிலிருந்து 04 வருடங்கள் காலப்பகுதிக்காக பாதி கைவிடப்பட்டிருந்தது. | செலுத்தல் வேண்டும். | தாய்க்கம்பனி - வேதேந்தா கம்பனி இனால் எடுக்கப்பட்ட அடிப்படை தீர்மானத்தின் அடிப்படையில் அதன் அகல்வாராய்ச்சி நடவடிக்கைகளை நிறுத்தியிருந்தது. அகல்வாராய்ச்சி நடவடிக்கைகளிற்கான கிரயங்கள் அக்கம்பனிகளால் செய்யப்பட்டிருந்ததனால் இவ்வகையான நிலமைகளை தவிர்க்க முடியாது. |
| (ஐ) ஐ.எச்.எஸ் சர்வதேச கம்பனி மன்னார் பேசினினுள்ள எம்2 காணித்துண்டுகளின் அகல்வாராய்ச்சி நடவடிக்கைகளிற்காகவும் சர்வதேச ரீதியில் இயற்கை வாயுவை வழங்குவதற்காக விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காகவும் 2016 இல் சர்வதேச போட்டி ஏலத்தினூடாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். 2016 திசெம்பர் தொடக்கம் 2018 ஆகஸ்ட் வரை சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தினை மேற்கொள்வதற்காக ரூபா 46,610,853 இற்கு சமனான ஐ.அ.டொலர் 300,000 ஏற்பட்டிருப்பினும் விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகள் தோல்வியடைந்திருந்தன. | செலவுகள் ஏற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் மற்றும் விஷேட அறிவுடைய நபரின் பரிந்துரையின் அடிப்படையில் ஒரு முறையான திட்டத்துடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏலங்கள் அக்கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட அகல்வாராய்ச்சியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட இயற்கை வாயு படிவுகளின் உற்பத்திக்காக அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதியுடன் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ஏதாவது சர்வதேச கம்பனிகள் அதற்காக முன்வந்திருக்கவில்லை. |
| (ஒ) மன்னார் பேசுடன் தொடர்புபட்ட காற்று ஈர்ப்பு மற்றும் காந்த தரவு செகரிப்ப செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் ஏல அழைப்பு மற்றும் ஏல தாரவை தெரிவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் இருந்த போதும் 07 வருடங்களாக செயற்திட்டத்தினால் எவ்வித செயலாற்றலும் அடையப்பெற்றிருக்கவில்லை. | உரிய வளங்களை அடையாளப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவதானிப்பின் படி 2015 நவம்பர் 18 இல் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி இங்கிலாந்தின் ஆர்க்கன் கம்பனிக்கு ஏலங்கள் வழங்கப்பட்டிருப்பினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அக்கம்பனி வகையற்றதாக ஆனதிலிருந்து பாதி நிறுத்தப்பட்டிருந்தது. மன்னார் மற்றும் காவேரி பேசிலுள்ள காணித்துண்டுகளின் அகல்வாராய்ச்சிக்கு ஏலங்களை கூறும் போது இத்தரவு சேகரிப்பு சிறந்த பங்கினை வழங்கியதிலிருந்து இக்காற்றுவெளி தரவு சேகரிப்பு |

| | | |
|---|---|---|
| | | செயற்திட்டத்திற்காக 2019 பெப்ரவரியில் அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி பெறப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 2019 ஆகஸ்ட் 15 இல் இலங்கை சோசலிச குடியரசிக்கும் பெல்ஜியோஸ்பேஸ் லிமிட்டட் என பெயரிட்ட இங்கிலாந்து கமபனிக்கும் இடையே ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுமிருந்தது. இச் செயற்திட்டமானது 2020 ஆம் ஆண்ன் போது பூர்த்தியாக்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது |

**3.6 வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் நீடிப்பின் தொழிநுட்ப விவரக்குறிப்பின் 401.07.01 பிரிவில் கூறப்பட்டுள்ள படி, அதிவேக நெடுஞ்சாவையின் சர்வதேச கடினத்தன்மை குறியீடு ஒரு கிலோமீற்றரிற்கு 1.5 - 2.3 மிற்றர் வரம்பிற்கு இடையில் இருக்க வேண்டும் அந்தக்குறிகாட்டிகள் தொழிநுட்ப ஆய்வு அறிக்கைகளில் ஒப்பந்தகாரர்களால் அடையப்பட்டுள்ளன. இருப்பினும், பௌதீக பரிசோதனையின் போது அவதானித்ததன் படி, மோட்டார் வாகனங்களின் நன்கு இயங்கும் நிலையை உறுதிப்படுத்த அதிவேக நெடுஞ்சாலையின் சில பகுதிகளின் மென்மையானது போதுமானதாக இல்லை. | தொழிநுட்ப விபரக்குறிப்புகளை தயாரிக்கும் போது வாகனங்களின் நல்ல இயங்கும் நிலையை உறுதிப்படுத்தும் விதிகள் வழங்கப்பட வேண்டும். | விவரக்குறிப்பு எண் 401.7.1 படி (மென்மையை ஆய்வு செய்ய) 10 கிலோமீற்றருக்கு (0.1) ஒரு மாதிரி பரப்பளவில் மேற்பரப்பின் மென்மையை பொறியியலாளர் தீர்மானிக்க வேண்டும் மற்றும் சர்வதேச கரடுமுரடான குறியீட்டால் வழங்கப்படும் மென்மையை ஒவ்வொரு பகுதியிலும் அளவிட வேண்டும். அந்த மதிப்பு (IRI) ஒரு கிலோமீற்றருக்கு 1.5-2.3 மிற்றர் வரை இருக்கவேண்டும். RDA இன் திட்டமிடல் பிரிவு தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்திற்கான கடினத்தன்மை சோதனையை மேற்கொண்டதுடன் IRI குறிப்பிட்ட வறையரைக்குள் இருப்பதை உறுதிப்படுத்தியது. |
| **(ஆ)** | தெற்க அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் விரிவாக்கத்துடன் தொடர்புடைய சாத்தியகூறு அறிக்கையின் பிரிவு 8.33 இன் படி பல சேவை பகுதிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும் சேவை நிலையங்களை நிர்மானிப்பதற்கான எந்தவொரு திட்டமும் அல்லது அளவு பில்கள் மூலம் நிதி வழங்கலும் செய்யப்படவில்லை. அதன்படி, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் விரிவாக்கத்திற்கான சேவை பகுதிகளை நிர்மானிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். | தெற்கு அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் விரிவாக்கத்திற்கு ஒரு சேவை பகுதி அவசியம் என்பது தெளிவாகிறது. அதன்படி, ஆரம்ப மதிப்பீடுகளில் சேவை பகுதிக்கான விலைகள் சேர்க்கப்படவில்லை என்றாலும், மேற்கண்ட 02 கட்டங்களில் |

| | | | |
|---|---|---|---|
| | 46 ஆவது கலோமீற்றர் தொலைவிலுள்ள வெலிபென்ன சேவை மையத்திற்கு பிறகு, 173 கிலோமீற்றர்களை கொண்ட அதிவேக நெடுஞ்சாலையின் இறுதிவரை சேவை வசதிகளை பொது மக்கள் அனுக முடியவில்லை. | | சேமிப்புக்களை பயன்படுத்தி சேவைபகுதியைநிர்மானிக்கசீனா எக்ஸிம் வங்கியிடம் ஒப்புதல் கோரப்பட்டது. இருப்பினும், பணத்தை கொடுக்க வங்கி நிராகரித்திருந்தது. மேலும், சேவைப்பகுதிக்கான அனைத்து அடிப்படை திட்டங்களும் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. |
| (இ) | அரசாங்க கொள்முதல் வாழிகாட்டுதல்கள் 2006 இன் துணைப்பிரிவு 2.4 மற்றம் 2.6 இற்கு இணங்க, ஏலங்களை முறையாக மதிப்பீடு செய்ய பெறுகை குழு மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவின் தேவை இருப்பினும், இரண்டாவது ஒருங்கிணைந்த சாலை முதலீட்டு திட்டத்தின் கீழ் இரண்டு ஒப்பந்த தொகுப்புகளுக்கு வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படவில்லை. பொறியியலாளர் மதிப்பீடு, ஏல ஆவணங்கள் மற்றும் பணி வகுப்புக்களுக்கு கொடுக்கப்பட்ட தவறான விளக்கங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான விகித வேறுபாடுகள் காரணமாக, இத்திட்டத்திற்கு 2019 திசெம்பர் 31 நிலவரப்படி ரூபா 28.73 மில்லியன் இழப்பு ஏற்பட்டது. | திட்டத்திற்கு ஏற்பட்ட இழப்பை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வேண்டும். | இந்த பொருட்களுக்கான விலைகள் பில் எண்களின் கீழ் மேற்கோள்காடி அனுமதிக்கப்படுகின்றன, மேலும் அந்த விலைகள் மற்றும் அளவுகளின் அடிப்படையில் கட்டணம் ஒவ்வொரு பொருளின் முன் மேற்கோள்காட்ட அனுமதிக்கப்படுகின்றது. இது முழு ஒப்பந்த தொகைக்கும் முன்நோக்கி கொண்டுசெல்லப்பட்டது, அதன்படிபெறப்பட்டகட்டணங்கள் தொடர்புடய விபரக்குறிப்புகளுக்கு பெறப்பட்ட குறைந்தபட்ச விலையாக எடுத்துக்கொள்ளப்படலாம். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 நிலவரப்படி, கடனின் வெளிப்படாத மூலத்தின் அடிப்படையில் ஒருங்கினைந்த வீதி முதலீட்டு திட்டத்திற்கு ரூபா 1,180.44 மில்லியன் ரூபாவும், இரண்டாவது ஒருங்கினைந்த வீதி முதலீட்டு திட்டத்திற்கு ரூபா 206.3 மில்லியன் ரூபாவும் நன்கொடை நிறுவனத்திற்கு தரகாக செலுத்தப்பட்டது. | திட்டத்தின் ஆரம்ப திட்டங்களின் படி, எதிர்பார்க்கப்படும் பணிகளை அதிகபட்சமாக செயல்படுத்தவும், வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படும் மொத்த கடன் தொகை பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நன்கொடை நிறுவனங்களுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களின் படி மேற்கண்ட கட்டணம் செலுத்தப்பட்டது கடன் ஒப்பந்தம் செயல்படுத்தப்பட்ட 60 நாட்களுக்குள், கடனைப்பயன்படுத்த தொடங்கிய நாளில் இருந்து, கடன் ஒப்பந்ததின் படி கடனில் பயன்படுத்தப்படாத தொகைக்கு உறுதிப்பாட்டு கட்டணங்கள் செலுத்தப்படுவது கட்டாயமாகும். |
| (உ) | அரசாங்ககொள்முதல்வழிகாட்டுதல்கள்2006 இன் பிரிவு 5.4.4(iii) இன் கீழ் ஒப்பந்தக்காரர்களிற்குசெலுத்தப்பட்டவேலை ஆரம்பிப்பு முற்பணம் முன்கூட்டியே, சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தின் மொத்த கொடுப்பனவுகளில் 90 சதவீத்தினை நிறைவு செய்வதற்கு முன்பு மீட்டெடுக்க வேண்டும். இருப்பினும், வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை | தொடர்புடைய முற்பண பணத்தை முறையாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒப்பந்தத்தை உடன்படிக்கையின் துணைப்பிரிவு 60.7 இன் படி, மொத்த ஒப்பந்த மதிப்பில் 90 சதவீதத்தை சான்றிதல் பெற்ற பின் மொத்த முற்பண கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். இந்த மொத்த தொகை இடைக்கால மசொதா எண் 39 இன் 2020 ஜனவரி |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தின் III Mம் கட்டத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 870 மில்லியன் முன் கூட்டிய மீட்டெடுக்க முடியவில்லை. அதே நேரத்தில் 2019 திசம்பர் 10 அன்று கடன் ஒப்பந்தம் முடிவதற்கு முன்பே அந்த ஒப்பந்ததின் மொத்த கொடுப்பனவுகளில் 99 சதவீதம் செய்யப்பட்டுள்ளது. | | இறுதிவரை பணிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. |
| **(ஊ)** | அரசாங்க கொள்முதல் வழிகாட்டுதல்கள் 2006 அன் பிரிவு 4.3.1 மற்றும் 2012 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை எண் 2/2012 இன் படி மொத்த செலவு மதிப்பீடுகளை தயாரிக்கும் பொது, அனைத்து செலவுகளையும் சேர்க்க மதிப்பீடுகள் முடிந்தவரை துள்ளியமாக தயாரிக்கப்படல் வேண்டும். இருப்பினும், 235 பொருடகளில் ரூபா 134.32 மில்லியன் மற்றும் தெற்கு சாலை இணைப்புத்திட்டத்தின் முறையே 01 மற்றும் 03 ஆகியவற்றுடன் தொடர்புடைய அளவுகளில் மசொதாக்களில் ரூபா 150 மில்லியன் குறிப்பிடப்பட்டுள்ள 198 பொருட்கள் 2019 திசெம்பர் 31 இற்குள் கூட செயல்படுத்தப்படவில்லை. அதன்படி இத்திட்டத்தால் ஒப்பந்தகாரரிற்கு வேலை ஆரம்பிப்பு முற்பணம் முன்கூட்டியே 42.65 மில்லியன் அதிக பணம் செலுத்தப்பட்டுள்ளது. | ஆதிகம் செலுத்திய வேலை ஆரம்பிப்பு முற்பனங்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முற்பணம் அதிகம் செலுத்தப்படாததுடன் ஒப்பந்தத்தின்விதிமுறைகளின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததொகையில் செலுத்தப்பட்டது. ஆனால், இறுதி ஒப்பந்ததொகையில் அடிப்படை அல்ல ஒப்பந்த காலத்தில் தொடக்கத்தில் முற்பணம் செலுத்தப்படுகிறது ஒப்பந்த காலத்தின் முடிவில் இறுதி ஒப்பந்த தொகை அறியப்படும். முற்பணம் ஏற்கனவே மீட்கப்பட்டது. |
| **(எ)** | தேசிய வீதி வலையமைப்பின் முக்கிய பாலங்கள் கட்டுமான திட்டம் (37 பெரிய பாலங்கள் கட்டுமான திட்டம்).<br>(i) 37 பெரிய பாலங்களை நிர்மானிப்பதற்காக ஐப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கியிடம் இருந்து ஜப்பானிய யென் 12,381 மில்லியன் கடன் பெற இலங்கை அரசாங்கம் 2013 மார்ச் 14 அன்று ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டது. 2019 ஒக்டோபர் இற்குள் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், 18 பாலங்களின் பணிகள் இன்னும் நிலுவையில் உள்ளதுடன் மீதமுள்ள 19 பாலங்களை நிர்மானிப்பதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படவில்லை. 2019 திசெம்பர் 31 உள்ளவாறு, மேற்கண்ட கடனில் 57 சதவீதத்திற்கு சமனான ரூபா 9,206 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கடன் ஒப்பந்தம் 2021 ஜூலை 05 அன்று காலாவதியாவதன் காரணமாக மேலும் அந்தக்காலத்ததை நீட்டிக்க வங்கி ஒப்பபுக்கொள்ளவில்லை. இதனால், மீதமுள்ள யென் 5,378 மில்லியன் இற்கு சமனான ரூபா 11,708 மில்லியன் அல்லது மொத்த கடன் தொகையில் 43 சதவீதம் பெற முடியவில்லை. | மும்மொழியப்பட்ட கடன் ஒப்பந்த காலத்தில் தொடர்புடைய வேலைகளை அதிகபட்ச நிலைக்கு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்தக்கடனின் கீழ் உள்ள ஒப்பந்தங்கள் ஜப்பானிய நிறுவனங்களிற்கு மட்டுமே வழங்கப்படும் என்றும், பொருட்கள் அல்லது சேவைகளின் மதிப்பில் 30 சதவீதம் ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்படலாம் அல்லது பெறப்படலாம் என்பதனால் ஆரம்பத்திலிருந்து 37 பெரிய பாலங்களை நிர்மானிப்பதற்கு கடன் போதுமானதாக இல்லை என்பது தெரிந்ததாகும்.<br>வீதி அபிவிருத்தி சாபையினால் ஒப்பந்தப் பொதிகளை வழங்கும் போது, கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் படி ஜப்பானிய ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே அவை வழங்கப்பட வேண்டும் என்பதால் விலைகள் அதிகமாக இருந்தன என்பதை அறியத்தறுகின்றோம். மேலும் குறைந்த எண்ணிக்கையிலான ஒப்பந்தரதர்களால் ஒப்பந்ததாரர்களிடையே நியாயமான போட்டி |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்படவில்லை. |
| | (ii)கடன்ஒப்பந்தத்தின்படி,05மாகாணங்களில் 37பாலங்களை05பொதிகளின்கீழ்நிர்மானிக்க முன் மொழியப்பட்டடது. இருப்பினும், கட்டுமான பணிகளின் முறையற்ற திட்டமிடல், ஒப்பந்தங்களைவழங்குவதில்தாமதம்மற்றும் பாலங்கள் கட்டுவதில் தாமதம் காரணமாக 37 பாலங்களில் 17 மட்டுமே 2018 திசெம்பர் 31ம்தேதிக்குள்நிறைவடைந்துள்ளன மேலும் 03 மாகாணங்களில் 03 பொதிகளின்கீழ் கட்ட உத்தேசிக்கப்பட்ட 19 பாலங்களின் கட்டுமானம் கைவிடப்பட்டது. | ஒப்பந்ததாரர்களிற்கு வழங்கப்பட்ட முற்பணத்தினை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிவில் ஒப்பந்தங்களுக்காக மீதமுள்ள தொகை யென் 3,425 மில்லியன், மேலும், நிர்மானிக்கப்பட்ட பாலங்களுக்காக செலவிடப்பட்ட தொகையை கருத்தில் கொண்டு அதிகபட்சம் மேலும் 09 பாலங்களை உருவாக்க சேமிப்பு பொதுமானதாக இருக்கும். அப்படியானால் 27 பாலங்கள் முழுவதுமாக முடிக்கப்படலாம். அதன்படி, கடன் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள படி கடன் தொகையை பயன்படுத்தி 37 பாலங்களை கட்டமுடியாது என்பது தெளிவாகிறது. |
| (ஏ) | ஒப்பந்த பொதி 01 இன் கீழ் இங்கிரிய – ரத்னபுர வீதியை நிர்மானிப்பதற்கான ஒப்பந்ததாரர் 2018 பெப்ரவரி 27 அன்று வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக ரூபா 1,687 மில்லியன் இழப்பீடு கோரினார். அதில் ரூபா 903.10 மில்லியன் 2018 ஏப்ரல் 30 உள்ளவறு வட்டி கட்டணங்களை கொண்டுள்ளது. இந்த உரிமைக்கோரலுக்காக முக்கிய காரணம் ஒப்பந்த காலத்தை 911 நாட்கள் அதிகரிப்பதாகும் என்று ஒப்பந்தகாரர் கூறியிருந்தார், இது திட்டத்தின் நோக்கத்தில் மாற்றம் மற்றும் பணித்திட்டங்களை அங்கீகரிப்பதில் தாமதம் போன்றன காரணமாக இருந்தது. 2019 ஒக்டோபர் 16 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானஇல.19/2683/119/095 இன் பிரகாரம் ரூபா 1 000 மில்லியன் மற்றும் தொடர்புடைய வரிகளை செலுத்த அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | வெளிநாட்டு நிதிகளின் கீழ் செயல்படுத்தப்படும் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்களை தொடங்கவும் தாமதமின்றி திட்ட கால எல்லைக்குள் தொடர்புடைய நிறைவு இலக்குகளை அடையவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2010 இல் ஒப்பந்த நிறுவனத்தால் பிணக்குகள் ஏழு பிணக்குகள் நடுவர்மன்றத்தில் குறிப்பிடப்பட்டன, மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆனது ஒப்பந்தகாரருக்கு ஏற்கனவே செலுத்திய தொகைக்கு கூடுதலாக ரூபா 1,638 மில்லியன் செலுத்த வேண்டும் என 2018 இல் பிணக்குகள் நடுவர்மன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அதன்பிறகு வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஒப்பந்தகாரருக்கு இடையில் ரூபா 1,000 மில்லியன் மற்றும் தொடர்புடைய வரி ஒப்புக்கொள்ளப்பட்டது. |
| (ஐ) | இலங்கை ரூபா தொடர்ந்து குறைந்து வருவதால், வெளிநாட்டுக்கு நிதியாக்கப்பட்ட திட்டங்களில் பரிமாற்ற இழப்புகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பிட்ட காலப்பகுதியால் திட்டங்களை பூர்த்தியாக்க தவறியது கூட பரிமாற்ற இழப்புகளில் அதிகரிப்புக்கு பங்களித்தது. அதன்படி, கடன் நிதியின் ஒரு பகுதியை பயன்படுத்தமுடியவில்லை. 04 திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மாதிரி சோதனையால் கண்டுபிடிக்கப்பட்ட பரிமாற்ற இழப்புக்கள் ரூபா 10,161 மில்லியன் ஆகும். | வெளிநாட்டு நிதிகளின் கீழ் செயல்படுத்தப்படும் வெளிநாட்டு நிதியாக்கப்பட்ட திட்டங்களை தொடங்கவும், திட்டக்கால எல்லைக்குள் தொடர்புடைய பூர்த்தியாக்கல் இலக்குகளை தாமதமின்றி அடையவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒப்பந்தத்தில் ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முடிவு செய்யப்பட்டுள்ள இலங்கை ரூபாய்க்கு எதிரான ஐ.அமெரிக்க டொலரின் மதிப்பு, பரிமாற்ற இழப்பிற்கு காரணம் என்று கூறலாம். பணம் செலுத்தும் தேதியால் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட விற்பனை மாற்று விகிதம் எதிர்கால ஒப்பந்த உடன்படிக்கைகளில் |

| | | | |
|---|---|---|---|
| | | | பொருத்தமாக இருக்கும் என்று பனிவுடன் தெரிவிக்கப்படுகிறது. |
| **(ஒ)** | சில திட்டங்கள் முடிந்த பிறகு, செயற்திட்டங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை செயல்படுத்தும் நிறுவனத்திடம் ஒப்படைப்பதன் மூலம் நடவடிக்கைகள் விரைவாக பூர்த்தியாக்கப்படவில்லை. அதன் விளைவாக திட்டங்களிற்கு கூடுதல் நிதி தேவை இன்றி செலவிடப்பட்டது. | பூர்த்திசெய்யப்பட்ட திட்டங்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை தாமதமின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திட்டத்தின் கலைப்பு கணக்கு தற்போது தயார்க்கப்பட்டு வருவதால், திட்டம் தொடர்பான அனைத்து பொறுப்பக்களையும் எதிர்காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்க நடவடிக்ககை எடுக்கப்படும். |
| **(ஓ)** | ரூபா 1,759 மில்லியன் 04 கட்டங்களை கொண்ட மத்திய அதிவேக நெடுஞ்சாலையினால் சாத்தியக்கூறு ஆய்வு செய்ய ஆஸ்திரேலிய நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டது. அந்த நிறுவனத்திடமிருந்து இறுதி சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையை பெறாமல், ரூபா 97 மில்லியனில் செலவில் சாத்தியக்கூற ஆய்வுக்கு பல உள்ளுர் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. | சாத்தியக்கூறு ஆய்வுகள் குறித்த அறிக்கைகளை தாமதமின்றி பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். சாத்தியக்கூறு ஆய்வு திருத்தப்பட வேண்டுமானால் அதை சம்மந்தப்பட்ட கட்சி மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு (SMEC) நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட மொத்த தொகை ரூபா 1,600,183,080 (வரி உட்பட) ஆக இருந்தது. அந்த நேரத்தில் நிறுவனம் (SMEC) முழு சாத்தியக்கூறு ஆய்வையும் முடித்து திட்ட அலுவலகத்தில் சமர்ப்பித்தது. அந்த அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையில் இருந்தன. ஏவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் வடக்கு அதிவேக நெடுஞ்சாலையின் தொடக்க இடத்தில் முதல் 10 கிலோமீற்றர் வீதியை மாற்ற அரசாங்கம் முடிவு செய்திருந்ததால் நிறுவனம் (SMEC) மேற்கொண்ட சாத்தியக்கூறு ஆய்வால் சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டியிருந்தது. அதன்படி, பொருளாதார சாத்தியக்கூறு ஆய்வை திருத்தி புதுப்பிக்க மொரட்டுவ பல்கழைக்கலகத்துடனும், சுற்றச்சூழல் மற்றும் சமூக தாக்க அறிக்கையை புதுப்பிக்க சிரிஜயவர்த்தன புர பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. |
| **(ஔ)** | 2020 மார்ச் 01 அன்று மத்திய அதிவேகப்பாதையின் III ஆவது பிரிவான பொத்துஹெர முதல் கலகெதர வரையிலான பாதையை நிர்மானிப்பதற்காக ஜப்பானிய ஒப்பந்தகாரர்களுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட செயல்முறையை நிறுத்தவும் மற்றும் டோக்கியோ மிட்சுபிஷி ருகுபு வரையறுக்கப்பட்ட வங்கியுடன் நிதி ஏற்பாட்டின் ஒப்பந்தத்தை நிறுத்தவும் | வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் மூலம் சிறப்புக்கடன்களை பெறும்போது செலவை குறைப்பதன் மூலம் துல்லியமான ஒப்பந்தகாரர்கள் மற்றும் நிதி வழங்குனர்களை பற்றி சரியான ஆய்வு மூலம் | 2020 பெப்ரவரி 19 மற்றும் 27 ஆகிய திகதிகளில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களின் போது, இந்தப்பகுதிக்கான முந்தைய கொள்முதல் செயல்முறையை ரத்து செய்வதற்கும்,புதிய கொள்முதல் செயல்முறையை தொடங்குவதற்கும் வீதிகள் |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சர்கள் அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், செயற்திட்ட பணிப்பாளர் 2019 ஜூலை 12 தேதியிட்ட கடிதத்தால் ஆலோசனை நிறுவனத்துடனான ஏற்பாடு முடிவிற்கு வந்தது. அதன்படி இந்த திட்டங்களின் கட்டுமான பணிகள் தொடர்பான கணக்காய்வு செய்வதில் சிக்கல் இருந்தது. | முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். | மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி ஒரு புதிய கொள்முதல் செயல்முறை தொடங்கப்பட்டு தற்பொது செயல்படுத்தப்பட்டு வருகிறது. |
| **(க)** | இலங்கை மத்திய வங்கியில் முற்பணகணக்கு கூற்றில் காட்டப்பட்டுள்ள முற்பணநிதிகளின் மீள்மதிப்பீட்டிலிருந்து கிடைக்கும் இலாபம் மற்றும் நட்டங்கள் தொடர்புடைய பேரேட்டு கணக்குகளிற்கு சரியாக எடுக்கப்பட்டிராததுடன் இதன் பெறுபேறாக போக்குவரத்து திட்ட ஆயத்த வசதி திட்டகணக்குகளில் பின்வரும் தாக்கங்கள் ஏற்பட்டிருந்தன.<br>(i) மீள்மதிப்பீட்டிலிருந்தான இலாப மற்றும் நட்டமானது மொத்த தேறிய தாக்கம் ரூபா 1,389,156 ஏற்பட்டு மீள்மதிப்பு பெறுமதி ரூபா 2,378,196 மீளாய்வாண்டில் கணக்குகளிற்கு தவறாக கொண்டுவரப்பட்டது. ஆதன் பெறுபேறாக மத்திய வங்கியின் முற்பண கணக்குமீதி, முற்பணநிதிமீள்மதிப்பீட்டு கணக்கு மீதி மற்றும் செயற்திட்டத்தின் மொத்த நடைமுறை சொத்துக்கள் என்பன ரூபா 3,767,352 இனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.<br><br>(ii) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறை வேலை ரூபா 2,778,312 இனால் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.<br><br>(iii) மத்திய வங்கியின் முற்பண கணக்கு மீதி மற்றும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றில் உள்ள மீதி என்பவற்றுக்கிடையில் ரூபா 3,767,354 வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரியான கணக்கு பதிவுகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மத்திய வங்கியின் முற்பண நிதி கணக்கு டொலர் பெறுமதி அடிப்படையில் மாதந்தோறும் மீள் மதிப்பிடப்படுகின்றது. 2019 ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரையான 05 மாதங்களுக்காக மீள்மதிப்பீட்டு பெறுபேற்றினை மதிப்பிடுகையில் உள்ளக நாட்குறிப்பு இல 5 தவறுதல் காரணமாக பிழையாக தயாரிக்கப்பட்டிருந்தது.<br>சாதகமான மற்றும் பாதகமான மாறுபாடுகள் ஒன்றுக்கொன்று மாற்றப்பட்டன. ஆகஸ்ட், செப்டம்பர் மற்றும் திசெம்பர் போன்ற 3 மாதங்களின் மீள்மதிப்பீட்டு அதிகரிப்பிற்காக ஒரு வரவு நாட்குறிப்பு பதியப்பட்டிருந்தது. |

## 3.7 சொத்து முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது செலவுகள் முகாமைத்துவம் நிதி ஒழுக்கங்களின் பராமரிப்பு எனும் பெயரினால்வெளியிடப்பட்ட2019 டிசம்பர் 04 ஆம் தேதியிட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இல. 07/2019 இன் பிரகாரம் செயலற்ற உறுதிகளின் வினையை தவிர்ப்பதற்கு செலவின முகாமைகளில் கிடைக்கூடிய வளங்களைப் பயன்படுத்த ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்பட வேண்டியிருப்பினும், அமைச்சின் வசம் உள்ள வாகனங்களில், பயன்படுக்க கூடிய நிலையிலுள்ள 07 வாகனங்கள் மீளாய்வாண்டில் பயன்படுத்தாமல் பாதுகாப்பற்ற முறையில் நிறுத்தப்பட்டுள்ளன. | ஆதணம் பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 நவம்பர் 18 அன்று மாநில அமைச்சர்களின்நியமனங்கள்ரத்துரு செய்யப்பட்ட நிலையில், ஊழியர்களுடன் இணைக்கப்பட்ட வாகனங்கள் அமைச்சகத்திற்கு திருப்பிஅனுப்பட்டன.அமைச்சின்மற்ற வாகனங்கள் அபிவிருத்தி அதிகார சபையினால் நிறுத்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளின் மேற்பார்வையில்வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கார் தரிப்பிடத்தில் வாகனங்கள் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டன. |

## 3.8 அரசு அதிகாரிகளின் பாதுகாப்பு வைப்பு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880(i) மற்றும் பொது அதிகாரிகள் (பாதுகாப்பு) கட்டளை (பந்தி.612) ஆகியவற்றின் படி, நெடுஞ்சாலைப் பிரிவுகளிலும், அமைச்சின் பெட்றோலிய வள மோம்பாட்டு பிரிவிலும் பாதுகாப்பு வைப்புத் தொகை வைத்திருக்க வேண்டிய அதிகாரிகள்எவரும் பாதுகாப்பு வைப்புத் தொகையை வழங்கியிருக்கவில்லை | நிதி விதி முறைகளுக்கு இனங்க வேண்டும். | நெடுஞ்சாலைப் பிரிவு நிதி நிதிப் பிரமாணம் 880(i) இன் படி பாதுகாப்பு இருக்க வேண்டி அதிகாரிகளால் பத்திரங்களை வழங்குதல் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுமகிறது. பெட்றெலிய வள மேம்பாட்டுப் பிரிவு பத்திரங்களை பெறுவது தொடர்பாடு ஒரு அ - பிரிவு குழு நியமிக்கப்பட்டுள்ளது மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |

### 3.9 இழப்புகள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்பு செய்யப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைளில் சேர்க்கப்பட்ட புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்ட அறிக்கையில், 2019 டிசம்பர் 31 வரை 17 வாகன விபத்துகள் தொடர்பாக மொத்த இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிகள் ரூபா 1,064,229 நிகழ்ந்து குறைந்தது 02 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், 2019 டிசம்பர் 31 க்குள் கூட நிலுவைத் தொகையை மீட்டு எடுக்கவோ, அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுக்கவோ நடவடிக்கை எடுக்கவில்லை. | இழப்புகள் மற்றும் சேதங்களை சரியான நேரத்தில் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது புத்தகத்திலிருந்து தல்லுபடி செய்ய வேண்டும். | முறையான ஒப்புதலின் படி, 2020 பெப்ரவரின் 21 அன்று 11 வாகன விபத்துக்கள் தொடர்பான இழப்புக்கள் மற்றும் தள்ளுபடிகள் ரூபா 366,222 பதிவழிக்கப்பட்டது. பிறவாகன விபத்துக்கள் தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

## 4. நிலையான அபிவிருத்தி

### 4.1 நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான தயார்படுத்தல்.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) நெடுஞ்சாலைப் பிரிவு** நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் ஆண்டு திட்டத்தில் சேர்கக்ப்படவில்லை. அனால் , 03 நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கான இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் ஆண்டு செயல்திறன் அறிக்கையால் குறிப்பிடப்பட்டுள்ளன , மேலும் அந்த குறிகாட்டிகளுக்கு பொருத்தமான முன்னேற்றத்தை குறிப்பிடவில்லை. | நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைய பொருத்தமான குறிக்கோள்கள் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் தொளிவாக அடையாளம் காணப்பட்டு அவற்றை அடைய சரியாக மதிப்பீடு செய்யப்படவேண்டும். | (அ) நெடுஞ்சாலைப் பிரிவு வீதிகள் மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் கீழ் முன்று அடையாளம் காணப்பட்ட இலக்குகள் நிலையான வளர்ச்சி இலக்குகளின் கீழ் உள்ளன. இந்த இலக்குகள் ஒவ்வொன்றையும் அடைவதற்க்கு அடையாளம் காணப்பட அபிவிருத்தித்திட்டங்களின்பௌதீக அபிவிருத்தித்திட்டங்களின்பௌதீக முன்னேற்றம் மற்றும் அவை தொடர்பாக அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் ஆண்டு செயல்திறன் அறிக்கையின் அத்தியாயம் 05 இன் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளன.வருடாந்த செயல்திட்டம் இந்த இலக்கு ஒவ்வொன்றிற்கான திட்டங்களையும் குறிப்பிடவில்லை |

| | | |
|---|---|---|
| | | ஆனால், எதிர்கால ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்திட்டத்தில் நிலையான அபிவிருத்தி திட்டங்கள் குறித்ததகவல்களைஉள்ளடக்கும். |
| **(ஆ) பெட்ரோலிய வள மேம்பாட்டுப் பிரிவு** | | |
| **(i)** 2017ஜூலை31தேதியாட்ட தேசியபாதிட்டு சுற்றறிக்கை எண் BD/CBP/4/1/2 -2018 இன்பிரகாரம்மலிவுமற்றும்சுத்தமானசக்தி அடையாளம் காணப்பட்டது நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நேரடியாக பொருந்தக்கூடிய இலக்காக இருப்பினும், அந்தநிலையானஅபிவிருத்தி இலக்கை அடைய எந்தவொரு திட்டமும் 2019 ம் ஆண்டில் திட்டமிடப்படவில்லை அல்லது செயல்படுத்தப்படவில்லை. | நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தொடர்புடைய குறிக்கோள்கள், இலக்குகள்மற்றும் குறிகாட்டிகள் தொளிவாக அடையாளம் காணப்பட்டு அவற்றை அடைய சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | இந்த அமைச்சகத்தால் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என்றும், இலங்கை பெட்ரோலிய நிறுவனம், இலங்கை பெட்ரோலிய சேமிப்பு முனைய நிறுவனம் மற்றும் பெட்ரோலிய வள மேம்பாட்டு செயலகம் ஆகியவற்றால் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவாக்கப்படுகிறது. பெட்ரோலிய வளமேம்பாட்டு செயலகம் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை ஆய்வு செய்வதற்கான திட்டத்தை அறிமுகப்படுத்தியது மேலும், யூரோ 4 நிலையான எரிபொருள் அறிமுகத்திட்டம் சிலோன் பெட்ரோலில் நிறுத்தால் 2018 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டது. அந்தத்திட்டத்தில் மலிவு மற்றும் சுத்தமான ஆற்றல், சக்தி, என்று அடையாளம் காணப்படலாம். |
| **(ii)** நிலையான இலக்குகளை அடைய அமைச்சின் ஊழியர்களை வழிநடாத்துவது தொடர்பாக 2019 டிசம்பர் 31 ஆம் தேதி அமைச்சகம் எந்தவொரு உள்ளக சுற்றிக்கையையோ வழிகாட்டலையோ வெளியிடவில்லை. மேலும், ஆர்வமுள்ள தரப்பினருக்கு இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு பயற்சித்திட்டம் கூட செயப்படுத்தப்படவில்லை. | நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தொடர்புடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த உள்கட்டுப்பாட்டு அமைப்பு உருவாக்கப்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். | அமைச்சின் அதிகாரிகள் அவ்வப்போது தலைப்புக்கள் குறித்து விளமளிக்கப்படுவார்கள் மேலும் சர்வதேச சுற்றுச்சூழல் தினத்திற்குஏற்பதேசியதிட்டத்தின் கீழ் 2019 ஜூன்07 அன்று ஓசோன் அடுக்கைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்து விரிவுரை வழங்கப்பட்டது. |
| **(iii)** நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் தொடர்புடைய நடவடிக்கைகளைஒழுங்குபடுத்துவதற்கு தேவையான மைல்கற்கள் மற்றும் குறிகாட்டிகளை அமைச்சு தொளிவாக அடையாளம் காணவில்லை. மேலும்,இது தொடர்பாக ஒரு தரவு சேகரிப்பு அமைப்பு நிறுவப்படாததுடன் இந்த நோக்கதிற்காக எந்த இதிகாரியும் பயன்படுத்தப்படவில்லை. | நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தொடர்புடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். | இத்திகதி வரை நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான தரவு சேகரிப்புகளை ஒரு வழிமுறையை எழுத்து பூர்வமான அமைச்சரகம் அறிவிக்கவில்லை. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் நிலையான அபிவருத்தி இலக்குகளை சேகரிப்பதற்கான ஓர் வழிமுறைகளை இந்த |

| | | |
|---|---|---|
| | | அமைச்சரகத்திற்க்கு எழுத்து மூலம் தெரிவித்த பின்னர், தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(iv)** பெட்ரோபலிய வள மேம்பாட்டு அமைச்சகம் நிலையான பேன்தகு இலக்குகளை அடைவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை அடையாலம்காணாததுடன் தற்போதுள்ள பௌதீக வளங்களையும் அமைச்சின் ஊழியர்களையும் இந்த விஷயத்தின் நிலை நிறுத்துவதற்கான ஒரு வழிமுறையையும் அடையாளம் காணவில்லை. மேலும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவது தொடர்பான ஒரு வழிமுறையையும் அடையாளம்காணவில்லை. | நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தொடர்புடைய நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த உள்கட்டுப்பாட்டு அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். | இந்த அமைச்சகம் மற்றும் நிறுவனங்களின் பங்களிப்புகள் ஏற்கனவே அமைச்சின் நிலையான வளர்ச்சியுடன் நேரடியாக தொடர்புடைய திட்டங்களில் செய்யப்பட்டுள்ளன. இயற்கை எரிவாய்வை ஒரு சுத்தமான எரிபொருளாக அறிமுகப்படுத்த கூடுதல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இது சக்தியை உருவாக்குவதற்க்கான குறைந்தபட்ச சார்பன் உமிழ்வைக் கொண்டுள்ளது. அமைச்சகம் இயற்கை எரிவாயு தொடர்பான தேசிய கொள்கையையும் வகுத்த அமைச்சர்களின் அமைச்சரவையின்பால்சமர்ப்பித்து. |

**5. நல்லாளுகை**

-----------------

**5.1 உள்ளக கணக்காய்வு**

---------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நெடுஞ்சலை பிரிவின் உள் கணக்காய்வு பிரிவின் 2019 திற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வுத் திட்டம் 32 கணக்காய்வுப் பணிகளை உள்ளடகியுள்ளது.இவற்றில்16 பணிகள் ஒவ்வொறு திட்டத்தினதும் உள் கணக்காய்வாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மிகுதியிருக்கும் 16 கணக்காய்வுப் பணிகளில் பிரிவு 08பணிகளை மட்டுமே2019ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட அளவு செயற்படவில்லை. | கணக்காய்வுத் திட்டம் மற்றும் கணக்காய்வுத் திட்ட வேலைகளை ஆற்றலுடையதாவதற்கு ஏப்ப உள் கணக்காய்வு ஊழியர்களை இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019இதற்கான உள்கணக்காய்வு திட்டத்தின் படி 05 கணக்காய்வு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

----------------------------------

### 6.1 இணைக்கப்பட்ட ஊழியர்கள்இ உண்மை ஊழியர்கள் மற்றும் தனிப்பட்ட சம்பளங்களிற்கான செலவு

நிதியாண்டின் இறுதியில் உள்ளவாரான அமைச்சின் நெடுஞ்சாலை பிரிவு மற்றும் பெற்றேலிய வள மேம்பாட்டுப் பிரிவின் உத்தியோகத்தர்கள் அமைப்பு பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **நெடுஞ்சாலைப்பிரிவு**<br>நெடுஞ்சாலைப்பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இரண்டாம் நிலைப்பிரிவில் 86 வெற்றிடம்கள் கானப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அமைச்சின் கடமையுடன் நேரடியாக தொடர்பு பட்டிராத வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்களின் கடமைகளிற்காக நியமிக்கப்பட்ட 87 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அமைச்சு விடுவித்திருந்தது.அமைச்சினால் மீளாய்வாண்டின் போது அவ் உத்தியோகத்தர்களிற்கு ரூபா 12,593,794 செலுத்தப்பட்டிருந்தது. மேலும், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 30 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். அதன்படி, முறையான மதிப்பீடு மற்றும் சேவையின் தேவைக்கான பரிந்துரைகளை சரி செய்யாமல் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் உண்மை ஊழியர்களின் தேவைக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்களை திருத்தி சம்பந்தப்பட்ட வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | அரசாங்கத்தின் கொள்கை முடிவின் அடிப்படையில், 2013 ஆம் ஆண்டில் 365 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இவ் அமைச்சில் அணைக்கப்பட்டுள்ளனர்.இந்த அதிகாரிகள் அனைவரையும் அமைச்சினால் தக்கவைக்க முடியாததால், அவர்கள் அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் பொறியியல் அலுவலகங்களுடன் தங்கள் குடியிருப்புக்களுக்கு அருகிலேயே இணைக்கப்பட்டுள்ளனர். எவ்வாராயினும், இந்த எண்ணிக்கையை குறைக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பலமுறைறயான வேண்டுகோலின் காரனமாக இப்போது அவ் எண்ணிக்கையை 220 ஆகக் குறைக்க முடிந்தது. அமைச்சின் தேவைக்கேற்ப முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் 2019 ஆம் ஆண்டில் 90 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை சரிசெய்ய கோரியது. ஆனால் இதுவரை அது அங்கீகரிக்கப்படவில்லை. மேலும், அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில், ஏனைய நிறுவனங்களிற்கான இடமாற்றங்கள் ஒரு வெற்றியாளர் இல்லாமல் செய்யப்பட்டது. மேலும், உரிய அலுவலகங்களிற்கு மீள்ஒப்படைகள் இருக்காது. அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர், ஓட்டுனர் மற்றும் அலுவலக உதவி சேவை பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்பவும் அமைச்சின் பொது நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அபிவிருத்தி அதிகார சபையின் 30 அதிகாரிகள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| **(ஆ) பெற்றோலிய வளங்கல் அபிவிருத்திப் பிரிவு**<br>2019 டிசம்பர் 31இல் உள்ளவாறு, மூத்த பணியாளர்கள் வரிசையில் 04 வெற்றிடங்கள், மூன்றாம் நிலை மட்டத்தில் 02 காலியிடங்கள், இரண்டாம் நிலை மட்டத்தில் 18 காலியிடங்கள்இ ஆரம்ப நிலை மட்டத்தில் 08 வெற்றிடங்கலும் காணப்பட்டதுடன் ஒரு யதார்த்தமான சேவையை பராமரிக்க இயலாமைகாரணமாக 32 காலியிடங்கள் இருந்ததுடன் ஊளியர்களின் எண்ணிக்கையை சரியான நேரத்தில் மதிப்பாய்வு செய்க.அதன்படி 2019டிசம்பர்31 இல் உள்ளவாறு நிறுவனத்தில் காலியிடங்களில் எண்ணிக்கை நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுடன் ஒப்பிடும் போது 33 சதவீதமாக இருந்தது. | அமைச்சின் உண்மையான ஊழியரின் தோவைக்கு ஏற்ப அங்கீகரிக்கப்பட்ட பணியாக்களை திருத்தி,சம்பந்தப்பட்ட காலியான இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதவிகலில் காலியிடங்கள் இருப்பது குறித்து பல சந்தர்ப்பங்களில் சம்பந்ப்பட்ட நிறுவனங்களுக்கு கோரிகைகள் வைக்கப்பட்டன தற்போது காலியிடங்களுக்கு 06 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். |

## 6.2 மனிதவள மேம்பாட்டுக்கான சரியான திட்டமிடல் இல்லாமை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நெடுஞ்சாலைப் பிரிவு**<br>2019 ஆம் ஆண்டிற்கான 13 முக்கிய பயிற்சி திட்டங்களை செயல்படுத்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தாலும் அந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு திட்டங்கள் மட்டுமே மீளாய்வாண்டில் செயல்படுத்தப்பட்டன. பயிற்சி திட்டத்தை தயாரிப்பதில் , ஒவ்வொரு பயிற்சி திட்டத்தில் மதிப்பிடப்பட்ட செலவு , பங்கேற்கும் அதிகாரிகளின் எண்ணிக்கை மற்றும் பயிற்சித் திட்டத்தின் காலம் ஆகியவை துல்லியமாக திட்டமிடப்பட்டு தயாரிக்கவில்லை. | வருடாந்த பயிற்சித்திட்ட தயாரிப்பில் பயிற்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு, பங்கேற்கும் அதிகாரிகளின் எண்ணிக்கை மற்றும் திட்டத்தின் காலம் ஆகியவை துல்லியமாக திட்டமிடப்பட வேண்டும். | அமைச்சின் அதிகாரிகளின் பணி, அணுகுமுறைகள் மற்றும் திறன்களை வழர்ப்பதற்காக 13 முக்கிய பயிற்சித்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும், அதிகாரிகளின் கோரிக்கைகள் மற்றும் பயிற்சித் தேவைகளின் அடிப்படையில் இனைணப்புத் திட்டங்களின் படி மற்றும் அவ்வப்போது பயிற்சி திட்டங்களுக்கு அதிகாரிகள் அனுப்பப்பட்டனர். அதன் படி 2019 ஆம் ஆண்டின் நடத்தப்பட்ட மொத்தம் பயிற்சி திட்டங்களில் 28 பல்வோறு பயிற்சிதிட்டங்கள், மற்றும் 7 கருத்தரங்குகளாக நடத்தப்பட்டன. இந்தத் திட்டங்கள் நிர்வாகிகள் உட்பட மொத்தம் 279 அதிகாரிகளுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்கிருந்தன. |